இதழ் –56

01.02.2023

# தமிழ்

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# தினமும் கொண்டாடுவோம் காதலை....!




பெப்ரவரி மாதம் உலகம் காதலை கொண்டாடும் தனிச்சிறப்பானதாகும். காதலை ஓர் நாளில் சுருக்கி கொண்டாட முனைந்ததால், ஏனைய 364 நாட்களும் காதலை கொள்கிற அவலங்களும் அரங்கேறுகிறது. கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் வருட மாணவி சதுரி ஹன்சிகா, அவரது காதலனால் படுகொலை செய்யப்பட்ட செய்தி சமகாலத்தில் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இவை காதலை சரியாக புரிந்து கொள்ள இயலாத மற்றும் புரிய வைக்காத சமூகத்தின் தவறேயாகும்.

ஆரோக்கிமான காதலுக்கும், வாழ்கைக்கும் உடல் தகுதியை விட உளத்தகுதியே முக்கியம் என யாழ்ப்பாண பல்கலைக்கழக உளவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.கஜவிந்தன் தெரிவித்துள்ளார். இது காதல் பற்றிய புரிதலுக்கு அவசியமாகிறது. காதலில் ஏற்படும் கொலைகளும் தற்கொலைகளும் உளவியல் பிரச்சினையில் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது.

எடுத்துக்காட்டாக, சிலர் தங்கள் காதல் இருவருக்கும் சரிவராது எனத் தெரிந்தாலும் அடிமைத்தனத்துடனும், முட்டாள்தனத்துடன் காதல் செய்தவரை ஒருவர் பிரிய முடியாது என்ற எண்ணங்களும் வாழத்தலைப்படுகிறார்கள். இன்னும் சிலர் ஒருவரால் நிராகரிக்கப்படும்போது தன் மீது என்ன தவறு என்பதை ஆராயாமல், அவளுக்காக வாழ்ந்த தான் ஏமாற்றப்பட்டதாகவும், பயன்படுத்தப்பட்டதாகவும், நிராகரிக்கப்பட்டதாகவும் உணருகிறான். இதனால் தனக்கு கிடைக்காத ஒன்று எவருக்கும் கிடைக்கக்கூடாது என்ற மனநிலைக்கு வந்துவிடுகிறார்கள். இவ்வாறான உளவியல்சார் அழுத்தங்கள் காதலின் தவறான எடுத்துக்காட்டுகளுக்கு காரணமாகி விடுகிறது. அளவிற்கு மிஞ்சினால் அன்பும் விசமாகிறு என்பதையே காதலின் மரணங்கள் வெளிப்படுத்துகிறது.

காதல் உன்னதமான மனித உணர்வாகும். அழிவாகும் காதல் பல ஆக்கங்களுக்கும் காரணமாகி உள்ளது. காதலர் தினம் அன்பின் பரிமாற்றத்தை நினைவுகூர்ந்து மெய்ச்சுவதற்கானதே. இன்று வணிக நோக்கில் காதலர் தின வடிவங்களும் மாறி விளைவுகளும் காமத்துக்குள் திரிபடைந்து காதலை இழிவு செய்கிறது. காதலை தினமும் செய்வோம். ஒரு நாளின் அன்பை பொழிந்து, பல நாளில் சினத்தை கொட்டும் சமூக திரிபை மீளச்சரிசெய்வோம்.

**காதல் செய்வோம்! தினமும்! அனைத்திலும்!**

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
வ.டியனி

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்துளை...

04 ”இருக்கிறாள்...” என்பதே இன்பம்
09 சித்திராங்கதா
16 மட்டக்களப்பில் வேலையில்லா திண்டாட்டமும் வறுமையும்
26 பரியாரியார் Vs அய்யர்
29 அழிவின் கடிகாரம்
30 கள்ளப்பாடு மக்களின் அல்லற்பாடு
24 உடலை உருக்குலைக்கும் போதைப்பொருட்கள்
27 ஐசிசி விருதுகள்-2022








நாம் கேட்டதெல்லாம் கிடைத்து விடுகின்ற இந்த உலகம் எல்லா நாளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. எம் ஆசைகள்- கனவுகள்- இலக்குகள் இவை யாவும் வாழ்நாள் முழுதும் நிரந்தரமானவையும் அல்ல. இன்று ஏதோ ஒன்றின் மீது பேராசை கொண்டு அலைகிறோம். நாளை வேறொன்றின் மீது அந்த ஆசை அலைபாய்கிறது. மனிதமனம் எதன் மீதும் ஒரு நிரந்தரமான ஆசை கொள்ளும் ஆற்றலற்றது என்பதை நாம் அனைவரும் அறிகிறோம். அடிக்கடி மறக்கிறோம். பிஞ்சுக்குழந்தையின் வண்ண வண்ணக் கனவுகள், விடலைப் பருவத்தின் பருவக் கனவுகள், இளமைத்துடிப்பில் வேகக் கனவுகள், உழைத்துக் களைக்கையில் ஊழியக் கனவுகள், தட்டுத் தடுமாறி நிமிர்ந்து நிற்கையில் பறக்க நினைக்கும் கனவுகள், குடும்பம் பெருகையில் பொறுப்பாய் கனவுகள், முதுமை நெருங்கையில் வாழும் நாட்களே கனவுகளாய்....
இப்படி வீடு, பணம், பட்டம், பதவி என மனிதனின் வேகமான பயணத்தில் அவனை முந்திச் செல்கின்றன அவனது கனவுகள்..

கனவுகள் அழிந்த காலம் என்ற ஒன்று எப்போது வரும்? அப்படி வரும் காலத்தில்தான் நமக்கு வாழ்வதுதான் கனவு என்று புரிய ஆரம்பிக்கும். சிறிது நேரத்திற்கு நாம்- நீங்கள் ஓடிக் கொண்டிருக்கும் கனவுகளை எல்லாம் ஒருபுறம் தள்ளி வைப்போமா? கொஞ்சம் வாழ்வதைப் பற்றி சிந்தித்துப் பார்ப்போமா?

வாழ்தல் என்பது பொறுப்பு அல்ல.. கனவு அல்ல.. ஆசை அல்ல.. இவை யாவும் அடங்கிய பின்னும் .. ஓய்ந்த பின்னும் இன்னும் நாம் வாழவேண்டும் என்பதற்கு ஒரு பிடிமானம் இருக்கிறதே.. அந்தப்பிடிதான் வாழ்தல் என்பது.. அந்தப் பிடிமானம் எப்போது உங்கள் கைகளை விட்டிச் செல்கிறதோ அப்போதுதான் உங்கள் வாழ்க்கை முடிவடைகிறது.

இம்மின்னிதழின் அட்டைப்படத்தை பாருங்கள். அப்படியொரு பிடிமானத்தையே காட்டுகிறோம். வாழ்தல் என்பது என்னவென்று புரிய இந்தக் காட்சியை உற்றுப் பாருங்கள். வாழ்வின் ஓசைகள் யாவும்

ஓய்ந்த பின் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த நிசப்தத்தை உங்களால் உணரமுடிகிறதா? அந்த அமைதியான வாழ்வின் பிடிமானம் எது என்று புரிகிறதா?

விடலைப் பருவத்தில் எதிர்பாலினத்தாரின் கவர்ச்சிக்கு ஈர்க்கப்பட்டு கவிதை, காமம், கலவி என்று இன்ன பிற இச்சைகளுக்கு ஆளாகி சமூகத்தின் மோசமான அவலமாய் மாறிப்போன "காதல்" என்ற தகாத வார்த்தையை பற்றி நிச்சயம் நாம் பேசவில்லை. இளையோரால் களங்கமாகிப்போன காதல் எனும் சொல்லை இந்த மூத்த குடிகளின் பேரன்பிற்கு பயன்படுத்த ஏனோ எமக்கொரு தயக்கம். இந்த அன்பு களங்கமற்றது. .. இருவர் வாழ்வினதும் ஒரே பிடிமானம் இந்த அன்புதான். இந்த அன்பிற்கு வார்த்தைகள் தேவையில்லை. அமைதி போதும். இச்சைகள் தேவையில்லை. இயல்பே போதும். நிபந்தனைகள் ஏதுமில்லை . ஆனாலும் நிம்மதி அளிக்கும். எல்லாவற்றையும் விட எந்த நிரூபனமும் இந்த அன்பிற்குத் தேவையில்லை.

இந்தத் தூய அன்பு கொண்டாடப்பட வேண்டியது. தூய அன்பைக் கொண்டாடும் தினமான பெப்ரவரி 14 இல் இவர்களது பேரன்பை கொண்டாட வேண்டும் என்று தூமி மின்னிதழ் பேரவா கொள்கிறது.

இளமைக்காதலில் வெறுமனே எதிர்பார்ப்புகள் தான் அதிகம். முதுமையின் பேரன்புற்கு என்ன எதிர்பார்ப்பு இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? எதுவும் இல்லை. அத்தகைய பேரன்பின் பேரழகை பற்றி எண்ணுகையில் ஒரு முந்தைய பாவலரின் கவித்துவக்காட்சி எம் நினைவை வந்து நனைக்கிறது. பாவேந்தர் பாரதிதாசன் படைத்தவை அந்தக் காட்சிகள் .

மூத்த கணவன்- மனைவி இருவர். மகன் வீட்டு தலைக்கடை அறைக்குள் சுருங்கிப் போய்விட்ட உலகம் அவர்களது. ஒரு காலத்தில் ஆடிய பம்பரங்கள்தான். அன்றிருந்த தோளின் வன்மை மூத்தவரிடத்தில் இன்றில்லை. விழியும் ஒளி குறைந்து கண்ணாடி துணை வேண்டுகிறது. வாயிலும் பல்லில்லை. மயிரும் வெண்பட்டு. உணவு என்பது பாலின் கஞ்சிதான். உலவுதல் என்பதும் அரிதிலும் அரிது.

அம்மையாரின் நிலையும் அதுவே. நன்னிலாக் கதிர் போல் நரைத்த கூந்தல். முன்னிலவை முகில் உண்டது போல் குறைந்துள்ள



முகத்தொளி. வானவில் போல் கூனிவிட்ட ஆயிரம் பிறை கண்ட மூதாட்டி. அந்த அறைக்குள் தான் அவர்கள் முழு உலகமும். பேரன் பேர்த்தி இடையிடையே வருவார்கள்! அளவளாவி முடிந்து மணி வந்ததும் விடை பெறுவார்கள்.

அங்கணமே ஒருமுறை பேரன் ஒருவன் அறைக்கு வந்தான். சிறிய மலை வாழைப்பழங்கள் பாட்டிக்கு பிடிக்கும் என்று எடுத்து வந்திருந்தான்.
பழங்களை வாங்கி ஆசையோடு பார்த்தாள் மூதாட்டி.

“தம்பி.. இந்தா.. முதல்ல தாத்தாவுக்குக் கொண்டுபோய்க் கொடு”

“கொடுக்கிறேன். பிறகு.. இது உனக்கு கொண்டுவந்தது அம்மாயி.. உனக்குத்தானே பிடிக்கும். நீ சாப்பிடு”

“முதலில் இதை தாத்தாவிற்கு கொடு” என்று பேரன் கொண்டு வந்து பழங்களை பெரியவரை நோக்கி உருட்டி விட்டபடி கீழே வைத்தாள் பாட்டி. சிரித்துக் கொண்டே பேரன் பழத்தை எடுத்து தாத்தாவிடம் கொடுத்தான். அவன் கொடுப்பதை கூர்ந்து நோக்கி மகிழ்ந்தாள் அம்மாயி. சத்தங்கள் இல்லாத அந்த மூத்தோரின் அன்பில் பேரனிற்கு ஆச்சரியம் அதிகம் . பாட்டனிடம் வேடிக்கையாக கேட்டான்..

“அம்மாயியிடம் உனக்கு இப்போதும் இன்பம் தருவது அப்படி என்ன தாத்தா?”

மூத்த விழிகள் சிரித்தன. தன் தலைமுறைப் பேரனை நோக்கிப் பதில் சொன்னார் மூத்தவர்

“பேரா... அவள் இன்று அன்று போல் புதுமலர் பூ அல்ல. நன்றாய் காய்ந்து போன புற்கட்டு தான் அவள் உடம்பு. சதிராடும் நடையும் அல்ல அவளது நடை. தள்ளாடி விழுகிற மூதாட்டி தான். முகம் கூட முழுமதி என்றில்லை. வரண்டுவிட்ட நிலம் போல்த்தான். கண்களோ குழி விழுந்த கண்கள். அவளிடத்தில் எது எனக்கு இன்னும் இன்பம் நல்கும் என்கிறாயா?” என்று கூறி மூதாட்டியின் கண்களை நோக்கினார் பெரியவர்.

பேரனைப் பார்த்து அவர் சொன்ன பதிலை பாவலர் சொல்கிறார் கேளுங்கள்.

“புதுமலர் அல்ல காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம்! குழிகள் கண்கள்!
எது எனக்கின்பம் நல்கும்?

**இருக்கின்றாள்.. என்ப தொன்றே!**

ஆம். அவள் இருக்கின்றாள் என்பது ஒன்று மட்டுமே எனக்கு இன்பம் நல்கிறது.” என்கிறார் பெரியவர்.

மேலும் சொல்கிறார். கேளுங்கள்.

“செம்மாதுளை பிளந்து சிதறுவது போல் சிரிப்பாள் அன்று. அந்த

சிரிப்பில் களிப்பேன் நானும். இந்நாளில் அம்மணியின் சிரிப்பு சத்தம் அடியோடு கேட்பதில்லை. ஆனாலும் என் பேரர் அவளை "அம்மாயி" என்றழைப்பர். கேட்பேன். அமிழ்தினில் விழுந்துவிடும் என் நெஞ்சம்.

உயிர்ப்பினை நிலை நிறுத்தும் நன்மழை
உலக நூலைச் செயிர்ப்பற
நீத்தார் செய்வார்
செவ்வேஅவ் வறநூல் தன்னை
முயற்சியிற் காப்பார் மன்னர்.
எனக்கென்ன இனி?அம் மூதாட்டி
உயிர்வாழ்வாள் ஆத லற்றான்
உவப்பூட்டும்
எனக்கிவ் வையம்"

அவள் என்னுடன் உயிர் வாழ்வதனால் மட்டுமே எனக்கு இந்த உலகம் இன்பமயமாய் தெரிகிறது என்று சொல்லும் அந்த அன்பின் ஆழத்தை எம்மால் எப்படி அளக்க முடியும் சொல்லுங்கள்.

மூத்தவர் சொன்னவை கேட்டு மணியை மறந்து மூழ்கிப்போனான் பேரனும்.

மூதாட்டி பெரியவருக்கு மலைவாழை கொடுத்த கதை இதுவென்றால் பெரியவர் ஒருமுறை மூதாட்டிக்கு பொரிமா கொடுத்த கதை வேற கதை. அந்தக் கதையையும் பாவலர் தேனினிய மொழியில் கூறுகிறார் கேளுங்கள்!

வலக்கால் குத்திட்டும், இடதுகால் மடித்தும்,
உட்கார்ந் திலக்கியம் உற்று நோக்கிடும்
மணவழ கர்தம்
மனையாள் நினைவாய்க்
கணுக்கால் கையூன் றியபடி
ஊன்றுகோல்
துணையொடு தம்,
தலை யணைக்கீழ் வைத்த
பொதிந்த பொரிமாப் பொட்டணம்
தூக்கி எழுந்தார்.

விழிப்புடன் விழுந்து விடாமே
நடந்து தம் துணைவியை
நண்ணினார்.

அப்போது மருமகள் நகைமுத்து வந்து,
"மாமா என்ன வேண்டும்? ஏன் வந்தீர்கள்?
என்னிடம் கூறினால் யான்செய் யேனா?"

என்றாள்.
பொரிமா இடையில் மறைத்தும்
தன்துணை மேலுள்ள
அன்பை மறைத்தும்
ஒன்று மில்லை ஒன்று மில்லை

என்று சொல்லொணாத்
துன்பம் எய்தினார்!
மருகி போனாள். கிழவர் துணைவியின் அருகுபோய்ப் பொரிமா அவளிடம் நீட்டி உண்ணென்று வேண்டி நின்றார்!

உண்டாள் நாணிப்
பிரிந்தார் உவந்தே

மூத்த அன்பின் தூய்மையை தரிசித்தீர்களா?

இந்த தரிசனங்களை நீங்கள் இதுவரை கண்டும் இருக்கலாம். கவனித்தீர்களா என்பதே கேள்விக்குறி.

பேரன்பை கொண்டாடும் பெருநாளை இவர்களுக்காய் அர்ப்பணிப்பதில் நாம் கொள்கிற பெருமை இப்போது எல்லையற்று நிற்கிறது.

கையிலே வலுவில்லை
காலில் வலுவில்லை
கண்ணில் ஒளி இல்லை
நாச் சுவையறிய வில்லை
மெய்யூறும் இல்லை
ஒலி காதறிய வில்லை
விலாஎலும்பின் மேற்போர்த்த
தோலுமில்லை நீவிர்
செய்வதொரு செயலில்லை
இன்பமுறல் ஏது?
தெரிவிப்பீர்?

வாசகர் சார்பில் அந்த மூத்தோரிடத்தில் ஒரு கேள்வி எழுப்பினார் பாவலர்.

மூத்தவர் வாக்காய் பதிலும் வந்தது.

“வாய் மூக்குக் கண் காது மெய் வாடினாலும்
மனைவிக்கும் என்றனுக்கும்
மனமுண்டு கண்டீர்
தூய்மையுறும் அவ்விரண்டு
மனம்கொள்ளும் இன்பம்
துடுக்குடைய இளையோரும்
படைத்திடுதல் இல்லை.
ஓய்வதில்லை மணிச்சிறகு!
விண்ணேறி, நிலாவாம்
ஒழுகமிழ்து முழுதுண்டு பழகுதமிழ்
பாடிச் சாய்வின்றிச் சறுக்கின்றி
ஒன்றையொன்று பற்றிச்
சலிக்காதின் பங்கொள்ளும்
இரண்டுமனப் பறவை”

மனதிற்கு மட்டுமே அன்பு சொந்தம். உடலிற்கு அங்கு தேவை என்ன? இரண்டு மனப்பறவைகள் சிறகடித்து பறக்கும் அன்பு வானை உங்களோடு பகிர்ந்ததில் மேலும் மகிழ்ச்சி எமக்கு. துவக்கத்துக்கும் முன்பே துவங்கி, முடிவுக்குப் பிறகும் தொடரும் இந்த அன்பு தரும் ஆச்சரியங்களை முழுமையாக அனுபவிக்க விரும்புகிறீர்களா? உங்கள் அன்பின் விதை எப்போது வேண்டுமென்றாலும் முளை விட்டிருக்கலாம், ஆனால் அந்த அன்பு முதுமையின் கடைசிப் படிக்கட்டுவரை பூக்கள் மலர்விப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இந்த பிரபஞ்சத்தின் உன்னத வாழ்க்கையை வரமாய் பெற்றவராவீர்கள்.

**மூத்தோர் வாக்கின் முதுநெல்லிச் சுவையோடு முடிக்கிறோம். அன்பின் பெரிநாளிற்காய் அனைவருக்கும் வாழ்த்துக்கள்...!**



# சித்திராங்கதா

காவ்யமோகன்



## தூயைப் போல

நல்லை வான் பரப்பில் போர்க் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. பூநகரியிலிருந்து உடனடியாக பின்வாங்க வேண்டும் என்ற யாழ் அரச ஆணையை மீறி முன்னேறிக் கொண்டிருந்த பறங்கியினத்தை வண்ணார் பண்ணையில் பாசறையிட்டு எதிர்த்துக் கொண்டிருக்கிறது வருணகுலத்தான் படை.

தஞ்சையிலிருந்து வந்த வீரர்களின் படை வீரம் அங்கு வென்று கொண்டிருந்தது. வகுந்திருந்த வியூகப்படி நல்லை படையினரின் ஒரு பிரிவு பறங்கியனை சாய்க்க களமிறங்கியிருக்கிறது. மிகுதி படையினர் சேனாதிபதி மகிழாந்தகன் தலைமையில் நல்லைக் கோட்டைக்கு பெருங்காவல் புரிந்துகொண்டிருக்கின்றனர்.

வருணகுலத்தான் வேண்டிக் கேட்டுக் கொண்டதை ஏற்று சங்கிலியனும் களத்திற்கு முதல் செல்லாமல் காத்திருந்தான். அதேவேளை போர்க்களத்து ஒற்றர் படையினரின் செயலும் மிகுந்த வினைத்திறனாய் திட்டமிடப்பட்டிருந்தது.

களத்தில் ஏதும் எதிர்பாரா ஆபத்து ஆகுமாயின் உடன் களமிறங்க தயார் நிலையில் இருந்தான் மகிழாந்தகன். அச்சமயம் ஆபத்தேதும் நிகழாதவண்ணம் கோட்டையின் காவலிற்காய் புத்தளத்து ராஜவன்னியர்களது படையணியும் வந்து கோட்டைக் காவல் பணிக்காய் காத்து நின்றனர்.

எல்லாம் வெற்றிகரமாக நிகழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் சங்கிலியனிற்கு ஒரே ஒரு விடயம்தான் உறுத்திக் கொண்டே இருந்தது. வருணகுலத்தானிற்கு துணை என்று நம்பி மிக்கபிள்ளையை மட்டும் அனுப்பியது சரியா? மிக்கபிள்ளையின் போக்கில் இப்போது பெரும் மாற்றத்தை

சங்கிலியன் கண்டிருந்தாலும் ஏதோ ஒரு சங்கடம் சங்கிலியனால் அவனை முழுதாய் நம்பமுடியவில்லை.

“மிக்க பிள்ளை திடந்தோள் வீரனாக இருந்தாலும் சொல்புத்திக் காரனல்லவா? யாராலும் அவன் மனதை இலகுவில் கலைத்து விடமுடியும் என்ற அச்சத்தினால்தானே வன்னியத்தேவனும், அந்த பறங்கிப் பாதிரியாரும் மிக்கபிள்ளையை விடுவிக்க வேண்டி தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தனர். இப்போது அவன் உண்மையிலே மனந்திருந்தி விட்டான் என்றாலும் இதுவும் எத்தனை காலம்? அவன் மனதை மேலும் யாரும் குழப்பாமல் இருக்கும் வரை தானே. அவனை துணை என்று நம்பி வருணகுலத்தானுடன் போரிற்கு அனுப்பியது சரியாகுமா? போரில் எதிர்பாராத காரியம் ஏதும் அவனால் நேர்ந்து விடுமா?” என்ற குழப்பத்தில் சங்கிலியன் மூழ்கி இருந்தான்.

அந்நியப்படைகளை எதிர்த்து நிற்க எமக்கு அதிக தைரியம் தேவையில்லை. ஆனால் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து நிற்கும் சுதேசிகளை நினைக்கையில் தான் அவன் மனம் வேதனையில் வேகியது. தெற்கில் எத்தனை வேந்தர்களை காக்க , பறங்கியனை எதிர்க்க தமிழ்ப்படை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இன்று நல்லை இராட்சியத்தை எதிர்க்க பறங்கியோடு சிங்களப்படைவீரர்கள் இணைந்து வருகின்றனராம் என்பதை சங்கிலியன் நம்பமுடியாதவனாய் நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

ஆனால் தஞ்சைவீரர் மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கை மட்டும் உருக்குலையாமல் அப்படியே இருந்தது. தஞ்சை வீரரோடு தான் களம்புகும் கணத்திற்காய் பேராவலோடு சங்கிலியன் காத்துக் கொண்டிருக்கிறான்.

கோட்டையின் மேற்கு வாசல் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நெடுநேரம் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மகாராணி மஞ்சரி தேவியர் பூஜையை முடித்துக் கொண்டு மந்திரி மனை நோக்கி வந்தார்.

எதற்காக? இதுவரை மந்திரி மகளாய் பார்த்த மாருதவல்லியை இப்போதுதானே தன் மகள் என்று பார்க்க போகிறார் மஞ்சரிதேவி. நாட்டின் இளவரசியை பார்க்கும் பேரார்வத்தோடே மந்திரிமனைக்கு வந்தார் தேவியர்.

“வாருங்கள்.. அரசி.. என்ன மந்திரிமனைக்கே வந்துவிட்டீர்கள்.. தகவல் தந்திருந்தால் நானே வந்திருப்பேனல்லவா...” அவசரமாக வரவேற்றாள் மாருதவல்லி.

“ஏன் மகாராணியை பார்க்க நான் வரக்கூடாதா?...”
என்று புன்னகையோடு கேட்டார் மஞ்சரிதேவி.

“நான் மகாராணியா? தாங்களன்றோ மகாராணி! மகாராணியை பார்க்க தங்கள் மாளிகைக்கு நான்தானே வரவேண்டும்..”

"ஆனால் மந்திரி மனையின் மகாராணி மாருதவல்லி என்றுதானே எல்லோரும் சொல்கிறார்கள். அப்படியென்றால் மந்திரிமனையின் மகாராணியை பார்க்க வேண்டுமானால் நான்தானே மந்திரி மனைக்கு வரவேண்டும்."

"ஓகோ.. அப்படிச் சொல்கிறீர்களா? அப்படியென்றால் சரி! இந்த மந்திரி மனையின் மகாராணியை பார்க்கவந்த நல்லைப்பெருமகாராணியே வருக வருக..." என்று கூறி விடாது சிரித்தாள் மாருதவல்லி.

அந்த சிரிப்பை கூர்ந்து நோக்கி இரசித்துக் கொண்டிருந்தார் மஞ்சரிதேவி. அந்த சிரிப்பு மஞ்சரிதேவிக்கு இன்று நிரம்பிய ஆனந்தத்தை அளித்தது.

"மாருதவல்லி நீ எப்படி இருக்கிறாய்?"

அந்தக்கேள்வி மாருதவல்லியின் சிரிப்பை திடீரென மறைய வைத்தது. அப்படியொரு கேள்வியை அரசி எதற்காக தனைப்பார்த்து இப்போது



கேட்கிறார் என்பது புரியாமல் விழித்தாள் மாருதவல்லி.

"மகாராணி.. இது என்ன கேள்வி? என்றுமில்லாதது போல் நல்லைக் கோட்டைக்குள் இராஜவாழ்வு வாழ்கின்ற இந்த மந்திரி மகளின் நலத்திற்கு என்ன கேடு இருக்கிறது? சங்கிலிய மகாராஜா ஆள்கின்ற தேசத்து மங்கையை பார்த்து மகாராணி இப்படியொரு கேள்வியைக் கேட்கலாமா?"

"தெரியாமல் கேட்டுவிட்டேன் மாருதவல்லி. மன்னித்து விடு! ஏதோ இன்று உன்னைப் பார்த்ததும் இப்படிக் கேட்கவேண்டும் போல் தோன்றியது."

"அப்படியா? ஏனோ... எனக்கும் இப்போது தோன்றுகிறது. கேட்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் மகாராணி?"

என்று மாருதவல்லி கேட்டதும் மஞ்சரிதேவியினால் சிரிப்பை ஒளிக்கமுடியவில்லை. இருவரும் தொடர்ச்சியாக சிரித்துக் கொண்டிருந்தனர்.

"மாருதவல்லி.. உன் உலகம் வேடிக்கைகளாலும் இன்பங்களாலும் நிறைந்திருக்கிறது!" என்று சிந்தனையில் ஆழ்ந்தவாறே கூறினார் மஞ்சரிதேவி.

மஞ்சரிதேவியின் அருகில் வந்து அவர் கைகளைபற்றிக் கொண்டு "அரசி! என் உலகம் மட்டுமல்ல எம் இராச்சியத்தில் எல்லோர் உலகமும்

இன்பமயமானதுதான்.” என்று சொன்னாள் மாருதவல்லி.

“ஆனால் என்னால் முடியவில்லை மாருதவல்லி. நாட்டில் நடப்பவைகள் எதுவும் மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதாய் இல்லையே. கொடும் பறங்கியர் அத்துமீறி கருமமாற்றிக் கொண்டிருக்கின்றனர். அவர்களோடு கைகோர்த்து களமிறங்கியுள்ள நம் நாட்டவரை பற்றி எண்ணுகையில் எனக்கு எதுவுமே புரியவில்லை. இப்படிக் குழப்பங்கள் சூழ்ந்த என் உலகில் இன்பத்திற்கு இடம் ஏது மாருதவல்லி..”

“ராணி.. தாங்களா இப்படிப் பேசுவது? நம் மன்னரது முதற்பலமே மகாராணி என்றல்லவா நான் இதுவரை கேள்வியுற்றேன்.”

“மாருதவல்லி.. மாமன்னர் சங்கிலியமகாராஜா எல்லாப் பகைகளையும் வென்று வெற்றி காண்பார் என்பது சத்தியமே. ஆனால் வெவ்வேறு விதமாக வளர்கின்ற சூழ்ச்சிகளை எண்ணுகையில் ஆபத்துக்கள் என்ன வடிவில் வரும் என்பதை இன்னும் புரிந்து கொள்ளமுடியவில்லையே. அது தான் என் சிந்தனையில் ஒரே குழப்பமாய் நிலவிக்கொண்டிருக்கிறது.”

“அரசி! அற்பப் பறங்கியனை எண்ணி நாம் அதிகபயம் கொள்ளத் தேவையில்லை. சிங்களப் படைகளை அவர்கள் வென்றுவிட்டால் நம் தமிழ்ப்படையினையும் இலகுவில் வென்றுவிடலாம் என்று தவறாய் கணக்குப் போட்டது அவர்கள் அறியாமையாகும். அவர்களிற்கு நாம் யார் என்று புரியவைக்க வேண்டிய தருணமே இப்போது வந்திருக்கிறது. அதுவும் எம்முடன் தஞ்சைப்படைகள் தூண் போல் நிற்கையில் நாம் ஏன் கலங்க வேண்டும்? ”

மாருதவல்லியின் வார்த்தைகள் மஞ்சரி தேவிக்கு அவள் யார் என்பதை நினைவுபடுத்தியது. மாமன்னர் சங்கிலிய மகாராஜாவின் புத்திரியல்லவா? கல்யாணிதேவியை மஞ்சரிதேவி பார்த்ததில்லை. ஆனால் கல்யாணிதேவியைப் பற்றி கேட்டறிந்த எல்லா இயல்போடும் ஒத்து நிற்கின்ற மாருதவல்லியை மஞ்சரிதேவி கண்டு வியந்தாள்.

சிந்தனையில் மூழ்கி நின்றவளை நிகழ்கணத்திற்கு கொண்டு வந்தாள் மாருதவல்லி

“ராணி .. அப்படி என்ன என் விழிகளில் தெரிகிறது? இப்படி உற்று நோக்கிய வண்ணமே இருக்கிறீர்கள்..”

“நம்பிக்கை மாருதவல்லி! உன் விழிகளில் தெரிகின்ற நம்பிக்கை என்னுள்ளும் பரவட்டுமே”

“நிச்சயம் அரசி.. ஆனால் என் நம்பிக்கையின் விதை கூட அன்று தஞ்சைவீரரால் இடப்பட்டதுதான். தஞ்சைவீரர் எம்முடன் இருக்கும் வரை இந்த நல்லைக் கோட்டைக்குள் எவரும் நுழைய முடியாது என்பது என் அசைக்கமுடியாத நம்பிக்கை ராணி”

“மன்னரும் அதைத்தான் கூறுகிறார் மாருதவல்லி. தஞ்சைவீரர் மீது கொண்ட

நம்பிக்கை கலப்படமற்றதுதான். ஆனால் அவரையும் தன் பக்கம் சாய்க்க எதிரிகள் பல சூழ்ச்சிகள் செய்துள்ளனராம். எல்லாவற்றிற்கும் அந்த ஆடலரசி சித்திராங்கதா உடந்தையாய் இருப்பதாய் வேறு அறிகிறேன். அவளது மாயவலைக்குள் மாவீரர் விழுந்து விட்டால் எம் நம்பிக்கைகளிற்கு எல்லாம் அவள் முற்றுப்புள்ளி வைத்துவிடுவாளோ என்று தோன்றுகிறது மாருதவல்லி"

"இல்லை ராணி! ஒருபோதும் இல்லை. தஞ்சைவீரரைப் பற்றி நான் அறிவேன். சித்திராங்கதாவை பற்றியும் அறிவேன். அவர்களின் தூ ய காதலைப் பற்றியும் அறிவேன். அரங்கேற்ற விடயத்தில் சித்திரங்கதா அடைந்த ஏமாற்றம் அவளை வெகுவாய் உருக்குலைத்திருக்கிறது என்பதை நானும் உணர்ந்தேன். அவள் குழப்பத்தை போக்க வழியறியாமல் தவித்த தஞ்சைவீரருக்கு அன்று வழிகாட்டியவளும் நான் தான். தஞ்சைவீரர் மீது எனக்கு திடமான நம்பிக்கை உண்டு. தாங்கள் எண்ணும்படி ஓர் அபாயம் அவ்வழியில் வர சாத்தியமேயில்லை அரசி.."

"கோட்டையில் அனைவரினதும் நம்பிக்கை அதுதான் மாருதவல்லி.. ஆனால் இப்படி ஒரு சூழல் நேரும் என்கிற சிறு அபாயம் இருக்கையில் கூட நீ வருணகுலத்தான் காதலிற்கு துணைநின்றது சரி என்று நினைக்கிறாயா மாருதவல்லி?"

"அரசி! நான் தங்களைப்போல சாணக்கியம் கொண்டவளல்ல. ஆனால் மந்திரி மகளாய் என் மூலம் இந்த நாட்டிற்கு கேடு சூழ்வதை ஒரு காலும் அனுமதியேன். இன்று இதோ இந்த மந்திரிமனையில் புனிதம் குறையாத மங்கையாய் நான் இன்றும் உயிர் கொண்டு நிற்பதற்கு ஒரே காரணம் தஞ்சைவீரர் என்பதை என் உள்ளம் ஒரு போதும் மறக்காது ராணி! அத்தகையவர் வாடி நின்ற கணத்தில் உதவுகிற மார்க்கம் நானறிந்தும் உதவாமலிருக்க என் மனம் அன்று ஒப்பவில்லை. நான் அன்று ஆற்றியது தவறென்று தாங்கள் கருதினால் என்னை மன்னித்து விடுங்கள் ராணி. ஆனால் அதனால் ஆபத்து சூழ்ந்துவிடும் என்று அச்சம் கொள்வதை என் சிறுபுத்தி இன்னும் ஏற்க மறுக்கிறது ராணி."

"உன்னில் நான் குற்றம் சொல்லவில்லை மாருதவல்லி. நீ சதாரணமானவள் கிடையாது என்பதை நன்கறிவேன். உன் மீது எந்தக் கேடும் பழியும் எப்போதும் சூழாது. ஆனாலும் எனக்கு இந்த இராச்சியத்தின் மீதுள்ள அக்கறை சித்திராங்கதா விடயத்தில் ஒரு சிறு அச்சத்தை எனக்குள் புகுத்திக் கொண்டே இருக்கிறது. ஒரு பெண்ணால் எதையும் சாதித்து விட முடியுமல்லவா?"

"அது உண்மைதான் ராணி. தாங்களைப் போன்ற பெண் உடனிருக்கையில் எம் மகாராஜாவிற்கு என்ன ஆபத்து நெருங்கிவிடப்போகிறது. தாம் எதையும் சாதிக்க வல்ல பெண்ணல்லவா? தாங்கள் சித்திராங்கதா குறித்து அப்படி எண்ணுவதில் எந்த அர்த்தமும்

இல்லை ராணி. அவளிடத்தில் இராச்சியத்தின் மீது பெருங்கோபம் நிலைகொண்டிருந்தது உண்மைதான். அந்தக் கோபத்திற்கு பின்னால் நியாயமான ஒரு காரணம் இருப்பதும் உண்மைதானே.. திட்டமிட்டு அக்காரியம் நாம் ஆற்றவில்லையாயினும் அவளது அரங்கேற்றம் நிகழாத வருத்தம் அவளிற்கு சாதாரணமாய் கடந்து போகக்கூடிய ஒரு விடயமல்லவே.. அவள் விடயத்தில் நாம் அச்சம் தவிர்த்து பொறுமை காப்பதே சிறந்தது என்பது என் அபிப்பிரயமாகும் அரசி!

“நீ கூறியது போல் அரசரும் இத்தனை காலம் அவள் விடயத்தில் பொறுமை காத்தே வந்தார் மாருதவல்லி. ஆனால் இப்போது போர் தொடங்கி விட்ட பிறகு எதையும் அலட்சியப்போக்கில் விட மன்னருக்கு ஏற்பில்லை. அது சரி என்றும் அரசர் கருதவில்லை. ஆதலினால் தான் அவளை சிறைபிடிக்க அரசர் ஆள் அனுப்பியிருக்கிறார்.”

“என்ன கூறிகிறீர்கள் ராணி?.. சித்திராங்கதாவை சிறைபிடிக்கவா?”

“ஆம்.. மாருதவல்லி! எச்சதத்தரும் அவளுடன் இல்லாத இச்சமயத்தில் அவள் தனியாக இருப்பது தேவையற்ற ஆபத்து என்று அரசர் கருதுகிறார். அதனால் தான் அன்று எச்சதத்தர் கூறியது போலவே அவளை சிறையில் வைக்க அரசர் ஆணையிட்டுள்ளார்.”

மாருதவல்லியால் அதனை ஏற்றுக் கொள்ளவே இயலவில்லை.

“இது அபத்தமாக தெரிகிறது ராணி.. ஈழ ஆட்சி மங்கையரை சிறைபிடிப்பதில்லை என்கிற கொள்கையையே மீறி ஒரு அபலை சித்திராங்கதாவிற்கு இப்படி மேலும் மேலும் துன்பமளிப்பது எனக்கு எவ்விதத்திலும் சரி என்று தோன்றவில்லை அரசி”

“மாருதவல்லி.. எச்சதத்தர் கூட இச்சமயம் உடல் நலம் குன்றி நாயன்மார்க்கட்டு வைத்தியசாலையில் சிகிச்சையில் உள்ளார். தனியாக சித்திராங்கதா கோப்பாயில் இருப்பதைக் காட்டிலும் சிறையில் அவள் இருப்பதே அவளிற்கும் நம் அரசிற்கும் பாதுகாப்பு என்பது மந்திரியாரது ஆலோசனைதான் மாருதவல்லி. என் அபிப்பிராயத்தையும் அரசர் கேட்டார். எனக்கும் அதுவே சரி என்று பட்டது.”

“பாதுகாப்பு வழங்க சிறைபிடிப்பது தான் வழியா அரசி.. ஏன் நம் அந்தப்புரத்தில் அவளை தங்கவைக்கக் கூடாதா?”

“அவளை நம் அந்தப்புரத்திற்கு அழைத்து வர உன்னால் முடியுமா மாருதவல்லி.. ?”

அமைதியாக நின்றாள் மாருதவல்லி.

“ஆனால் அரசர் அதற்கான ஆயத்தங்களையும் செய்தார். அரச ஆணையையும் அவள் ஏற்க மறுத்துவிட்டாள். அதனால்த்தான் இதைத்தவிர வேறுவழியில்லை என்ற இறுதி முடிவிற்கு அவர் வந்தார்.

கொடுமைகள் எல்லை மீறாதிருக்க சில கொள்கைகளை மீறுவது தவறல்ல மாருதவல்லி. சிறையில் அவளிற்கு எந்த கெடுதலும் வராமல் நான் பார்த்துக் கொள்வதாய் அரசர்க்கு வாக்களித்துள்ளேன். நீ வருத்தம் கொள்ளாதே மாருதவல்லி.”

“அரசி.. எனக்கு ஏனோ சரியாகப்படவில்லை. நம் இராச்சியத்தின் பெருக்குற்றமாய் இது மாறிவிடுமோ என்று இப்போது அச்சம் கொள்கிறேன்...”

கலங்கி நின்ற மாருதவல்லியை அணைத்துக் கொண்டார் மஞ்சரி தேவி.

அவள் தலையை தடவியபடி “உன் அன்பு களங்கமற்றது என்பதை அறிவேன் மாருதவல்லி. நீ வருந்தாதே.. எல்லாம் நம்- உன் நன்மைக்காகவே...”

அரசியின் அரவணைப்பில் மாருதவல்லியின் கண்கள் ஏனோ நனைந்துவிட்டன..

வருவாள்...

## முயல் புத்தாண்டு

சீனாவில் தொழில்நுட்ப ஜாலங்களுடன் முயல் புத்தாண்டை வரவேற்று, கொண்டாட்டங்கள் களைகட்டின. சீனாவில் சந்திரனின் சுழற்சியை அடிப்படையாக கொண்டு புத்தாண்டு கொண்டாடப்படுவதோடு, ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு விலங்குகளின் பெயரில் கொண்டாடப்படுவது வழக்கமாகும். முப்பரிமாண தொழில்நுட்பத்தில் பல்வேறு பின்னணிகளுடன் உருவாக்கப்பட்ட மேடையில், அழகழகாய் முயல் போல உடையணிந்த சின்னஞ்சிறார் விழாவை அலங்கரித்தனர். அதைத் தொடர்ந்து, சீனாவின் பாரம்பரிய ஆடல், பாடல் மற்றும் நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. அதேபோல், பல்வேறு சாகச நிகழ்ச்சிகளுடன் விழா உற்சாகமாக கொண்டாடப்பட்டது.






## மட்டக்களப்பில்

# வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும்

வ. டியனி

வேலையின்மை மற்றும் வறுமை என்பன அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் முன்னால் உள்ள ஒரு பாரிய சவாலாகும். இவை பற்றி சரியாக புரிந்து கொள்ளாமலும் அதனை ஒழிக்காமலும் நாட்டின் ஆக்கபூர்வமான அபிவிருத்தி பற்றி சிந்திக்க முடியாது என்பதே உண்மையாகும்.

இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத் தீவின் கிழக்கே அமையப் பெற்றது மட்டக்களப்பு மாவட்டமாகும். இது 2633.1 சதுரக்கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டுள்ளது. இம்மாவட்டமானது 14 பிரதேச செயலாளர் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் இயற்கை வனப்பும் அதனை ஒருங்கே கொண்ட வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டமானது கடந்த மூன்று தசாப்த கால உள்நாட்டு யுத்தம் மற்றும் 2004ல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இதன் சமூக பொருளாதார அடித்தளங்கள் மீது பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை மறுக்க முடியாத ஒன்றாகும்.



மட்டக்களப்பு பிரதேசத்தின் பிரதான அம்சம் அதன் நடுவண் அமைந்துள்ளதும் 50 மைல் நீளங் கொண்டதுமான வாவியாகும். நாட்டின் வனப்பிற்கும் வளத்திற்கும் இவ்வாவி ஏதுவாயுள்ளது. இயற்கையின் காரணமாக மட்டக்களப்பில் எழுவான்கரை, படுவான்கரை எனும் இரு பிரிவுகள் அமைந்துள்ளன. இதில் எழுவான்கரைப் பகுதி குடிசனப் பெருக்கமுடையதும் வர்த்தக சமூகத்தினர் செறிந்து வாழ்வதுமான பிரதேசமாகவும் சமூக பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்ற பிரதேசமாகவும் காணப்படுகின்றது. வாவியின் மேற்கிலமைந்த பகுதி படுவான்கரை எனப்படும். இப்பிரதேசம் மிகப்பரந்த வயல் வெளிகள் மற்றும் எழுவான்கரைப் பகுதியுடன் ஒப்பிடுகையில் சமூக பொருளாதார ரீதியில் வளர்ச்சியினை வேண்டி நிற்கும் சமூகங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகவும் காணப்படுகின்றது. இது மட்டக்களப்பு மேற்குப் பிரதேசம் எனவும் அழைக்கப்படுகின்றது.

உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட இடப்பெயர்வு மற்றும் யுத்த செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. இன்று இப்பிரதேசமானது சமாதானக்




காற்றைச் சுவாசிக்க ஆரம்பித்துள்ள போதிலும் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான மக்களின் போராட்டம் தற்கால கட்டத்தில் மிகத் தீவிரமாக உள்ளதென்றே கூறவேண்டும். யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திட்டங்கள் முனைப்புப் பெற்றுள்ள இவ்வேளையிலும் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வறுமை போன்ற சமூக பொருளாதாரப் பிரச்சினைகளால் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வரும் இப்பகுதி மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகவே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வேலையில்லாத் திண்டாட்டமானது மிகப் பிரதான பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. வேலையின்மையானது வருமானம் உழைக்கும் அளவினைப்பாதித்து அதன் மூலம் வறுமையைத் தூண்டுகின்றது. இப்பிரச்சினைகளை அடியொட்டியதாக கீழுழைப்பு, அடிப்படை வசதிகளின்மை, சுகாதார வசதிகளின் பற்றாக்குறை போன்ற பல பிரச்சினைகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பிரச்சினைகளால் இவர்களின் வாழ்க்கைத் தரமானது வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதைக் காணமுடிகின்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவானது 90 ற்கு அதிகமான கிராமங்களை

உள்ளடக்கிய 346 கிராமசேவகர் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பிரதேச செயலாளர் பிரிவினுள் 86028 பேர் வசித்து வருகின்றனர். இங்கு வாழும் பெரும்பாலான குடும்பங்களின் பிரதான ஜீவனோபாய மார்க்கங்களாக கூலித்தொழில் மற்றும் விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்றன காணப்படுகின்றன. பிரதேச செயலக அறிக்கைகளின்படி அரசதொழில் வாய்ப்புப்பெற்றோர் தொகை மிகக் குறைவாகும். இப்பிரதேசத்தில் பிரதான தொழில் மூலங்களான கூலித் தொழில் நிச்சயமற்ற தன்மையினைக் கொண்டுள்ளதுடன் விவசாயம், மீன்பிடி போன்றன பருவகாலத் தொழில்களாகக் காணப்படுகின்றது. இதனால் அன்றாடத் தொழில் செய்து வாழ்வாதாரத்தை நடாத்தி வரும் இப்பகுதி மக்கள் நிரந்தரத் தொழில் ஒன்று இல்லாமையினால் ஓர் நிலையானதும் போதுமானதுமான வருமானத்தைப் பெறமுடியாமல் மிகவும் துன்பத்தினை அனுபவித்து வருகின்றனர்.

இங்கு வாழும் மொத்தக் குடும்பங்களில் 65% வீதமான குடும்பங்கள் சமூர்த்தி நிவாரணம் பெறும் வறிய குடும்பங்களாகவே காணப்படுகின்றன. மொத்த ஊழியப்படையில் 54% வீதத்தினர் தொழில் வாய்ப்பற்றவர்களாக உள்ளனர். தொழிலற்றோரில் 65% ற்கும் மேற்பட்டோர் கா.பொ.த சாதாரண தரம் மற்றும் அதற்குக் குறைந்த கல்வித் தகைமைகளைக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். (source: resource proÞle , divisional secretariat MN, 2010) இவர்கள் அனைவரும் தொழில் வாய்ப்புப் பெற்றோரின் வருமானத்திலே தங்கி வாழ்கின்றனர். அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்வதற்கு முடியாத நிலையில் காணப்படும் இம்மக்கள் மத்தியில் வறுமை நிலையினைக் காணக் கூடியதாக உள்ளது.

இப்பிரதேசத்தில் காணப்படும் ஓர் உயரிய பிரச்சினையாக வேலையின்மை காணப்படுகின்றது. விவசாயச் செய்கையினை மேற் கொள்வதற்கான வள வாய்ப்புக்கள் அமையப்பெற்ற பிரதேசமாக இது காணப்பட்ட போதிலும் அதனை மேற்கொள்வதற்கான போதிய மூலதனவசதி இன்மையால் நகர் பகுதிகளைச் சேர்ந்த தனவந்தர்களாலே இங்கு அதிகளவான விவசாயச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. தமது வயலை குத்தகைக்கு கொடுத்து அவ்வயலிலே கூலித்தொழில் செய்யும் மக்களும் இங்கு காணப்படுகின்றனர். பொருளாதார வளர்ச்சி, வறுமைக் குறைப்பு, உணவுப் பாதுகாப்பு மேம்பாடு என்பவற்றிற்குப் பங்களிப்புச் செய்யும் விவசாயத்துறையானது கிராமப் புறங்களில் தொழில்வாய்ப்பு



வழங்குவதில் பிரதான மூலமாகவும் காணப்படுகின்றது. ஆனால் தற்பொழுது தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக விவசாய இயந்திர சாதனங்களின் வருகை இத்துறைசார் தொழில்வாய்ப்பு வழங்கும் ஆற்றலில் தாக்கம் செலுத்தியுள்ளமையை காணமுடிகின்றது.

நெல்லுற்பத்தி பிரதானமாக மேற்கொள்ளப்படும் இப்பகுதியில் விவசாயத் துறையில் உள் வாங்கப்படும் ஊழியர்களின் அளவு குறைவடைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. நெல் அறுவடைக் காலங்களில் தற்பொழுது அதிகளவான அறுவடை இயந்திரங்கள் பயன்படுத்தப் படுவதனால் இத்துறையில் தேர்ச்சி பெற்ற பல ஊழியர்களால் தொழில்வாய்ப்பினைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. இயந்திர சாதனங்களின் வருகையால் தொழிலினை இழந்த மேலதிக ஊழியப்படையானது கைத் தொழிற்றுறை விருத்தி பெற்ற நகர்ப்புறங்களை நோக்கிய நகர்வுக்குத் தூண்டப்பட்டுள்ளது. தொழிலின்மை மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கு



வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடிச் செல்லும் நிலையும் இங்கு உருவாகியுள்ளது.

போதிய தொழில்வாய்ப்புக் கிடைக்காமையால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஊழியர்கள் தொழில் வாய்ப்புக்களைத் தேடி மட்டக்களப்பு மாவட்டத்தின் எழுவான் கரைப்பகுதியில் அமைந்துள்ள நகர்பகுதிகளை நோக்கி நகர்வடைகின்ற நிலையினைக் காணக்கூடியதாக உள்ளது. தொழில் வாய்ப்பினைத்தேடி அதிகாலை வேளையில் தமது தொழில்சார் உபகரணங்களுடன் புறப்படும் தொழிற்படையினர் வர்த்தக ரீதியில் வளர்ச்சி பெற்றுள்ள காத்தான்குடி பிரதேசத்தினுள் தஞ்சம் புகும் நிலை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. பொழுது புலர்வதற்கு முன்னர் காத்தான்குடி நகர்ப்பகுதியை வந்தடையும் இத்தொழிலாளர் குழுமம் இப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு முன்னர் அதன் முன்னால் தொழில் தருனர்களின் வருகைக்காக காத்திருக்கும் அவலநிலையைக் காணக்கூடியதாக உள்ளது. காத்தான்குடியின் கடைத்தெருவின் இரு மருங்கிலும் காத்திருக்கும் நூற்றுக்கணக்கான ஊழியப்படைக்கு தொழில் கொடுக்கும் அளவிற்கு அப்பிரதேசத்தில் தொழில்வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

அதிகாலை முதல் தொழிலுக்காக காத்திருக்கும் தொழிலாளர்கள் மேசன், ஓடாவி மேசன்கூலி மற்றும்

எந்த ஒரு கூலித்தொழிலைச் செய்வதற்கும் தயாரானவர்களாகவே உள்ளனர். இவர்கள் காத்தான்குடி, ஆரையம்பதி, கல்லடி மற்றும் மட்டக்களப்பு நகர்ப்பகுதியைச் சேர்ந்த மக்களினால் வேலைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர். தமது தகுதிக்குக் குறைந்ததும் குறைந்தளவான கூலியினைக் கொண்டதுமான தொழில்களைக்கூட செய்வதற்குத் தயாரான நிலையில் வாழும் இவர்கள் அனைவரிலும் தொழில் கிடைப்பது ஒரு சிலருக்கே. ஏனையவர்கள் அன்றைய தினம் முழுவதும் வீதியோரங்களில் காத்துக் கிடந்தபடி ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர். மறுபுறத்தில் வேலைக்காகச் சென்றவர்களின் வருகைக்காக காத்திருந்த குடும்பத்தினருக்கு கிடைப்பது வெறும் ஏமாற்றமே. குறித்த தினம் முழுவதும் கிடைப்பதை உண்டு பட்டினியால் வாடியபடி வாழ்வைக் கழிக்கும் இவர்களின் வறுமை நிலையானது, போசாக்கு நிலையினை மட்டுமன்றி மனரீதியில் பாதிப்பினையும், வாழ்க்கையில் வெறுப்பினையும் ஏற்படுத்தி இருக்கின்றமை மறுக்கமுடியாத உண்மையாகும்.

தொழில் வாய்ப்பற்ற ஊழியப் படையினர் மத்தியில் அவதானிக் கப்பட்ட மற்றுமோர் பிரச்சினையாக கீழுழைப்பு காணப்படுகின்றது. இங்கு கீழுழைப்பு என்பது "இலங்கையின் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டின் படி ஒருவருடைய தொழிலானது சாதாரண வேலை நேரத்திலும் குறைவாக இருப்பதுடன் கூடிய வேலை நேரத்தை எதிர்பார்ப்பவராக அல்லது மேலதிக வேலையை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் போது இவ்வாள் கீழுழைப்பாளியாவர்" (இ.ம.வ.ஆண்டறிக்கை,2005).

இதனால் வேலை செய்வதற்கான ஆர்வம் இருந்தும் குறைவான மணித்தியாலங்களே இவர்களுக்கு வேலை கிடைக்கின்றது. அதே நேரம் அதிக நேர வேலை கிடைக்கும் பட்சத்தில் அதற்கு குறைந்த வேதனத்தையே பெற வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறு இப்பிரதேசத்தில் காணப்படும் உயர் வேலையின்மை நிலையானது ஊழியச் சுரண்டல்களுக்கு வழி வகுப்பதன் மூலம் பாதகமான ஒரு தாக்கத்தையே இப்பகுதிப் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்திவிடுகின்றது.

இதுவரைகாலமும் கடைத்தெருவின் அருகில் காத்திருந்த ஊழியர்கள், அங்கு காத்திருக்கும் அனைவருக்கும் தொழில்கிடைக்காத காரணத்தினால், கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு நகர் உள் வீதிகளுடாகச் சென்று



அங்குள்ள வீடுகளில் வேலை கேட்கும் ஒரு புதிய வழிமுறையை நாடியுள்ளனர். இதனால் வீதியில் காத்திருப்போருக்கு வேலை கிடைப்பது குறைவடைந்து செல்வதாக சிலர் அங்கலாய்க்கின்றனர்.

இப்பகுதி ஊழியப்படையினரில் அதிகமானோர் தேர்ச்சி பெறாத ஊழியர்களாகவே (unskilled labour) காணப்படுகின்றனர். இவ்வாறான நிலைமையானது இவர்களுக்கான தொழில்வாய்ப்புக் கேள்வியினை குறைத்துவிடுகின்றது. தொழிலின்மை காரணமாக குடும்பச் செலவுகளை சமாளிக்க முடியாத நிலையில் சிலர் சட்டரீதியாக தடை செய்யப்பட்ட சில தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு அவை அறியப்படும் சந்தர்ப்பத்தில் தமது வருமானத்திலும் மிகப் பெரிய தொகையினைத் தண்டப்பணமாக செலுத்திய சம்பவங்களையும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது வேலையின்மையானது சட்டவிரோத செயல்களைச் செய்வதற்குத் தூண்டும் ஒரு வழிமுறையாக உள்ளதனால் இப்பிரச்சினை மீது அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுதல் அவசியமாகும்.

## அடிப்படை வசதிகளற்ற குடியிருப்புக்கள்

இங்கு வாழும் குடும்பங்களில் அதிகமான குடும்பங்கள் குறைந்த வருமானத்தைப் பெறும் வறிய குடும்பங்களாகவே உள்ளனர். விலைவாசி உயர்வினால் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவை ஈடுகட்டுவதற்குத் தேவையான போதிய வருமானத்தைப் பெறமுடியாமல் வறுமையில் வாழ்பவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். இக்குடும்பங்களில் வாழும் பிள்ளைகள் போதிய கலோரியை நுகர முடியாமையினால் போசாக்கு குறைந்தவர்களாக காணப்படுகின்றனர். சிறுபராயத்தில் காணப்படுகின்ற மந்த போசனை முழுமையான மனித இயலுமை வெளிப்பாட்டினை மழுங்கடிக்கச் செய்கின்றது.

குடும்பத்தில் காணப்படும் வறுமை நிலை காரணமாக சிறுவர்களில் பலர் கல்வியைத் தொடர முடியாமல் கல்வி கற்கும் வயதிலே கல்வியை இடை நிறுத்தி வேலைக்குச் செல்லும் நிலைமையையும் காணமுடிகின்றது. வேலையின்மையானது வறுமையினை மட்டுமல்லாது குடும்பத்தில் போதிய வருமானமின்மையினால் சேமிப்பு மற்றும் எதிர்கால தேவையை ஒட்டிய முதலீடுகளை மேற்கொள்வதற்கும் தடையாகக் காணப்படுகின்றது. இதனால் திடீரென ஏற்படும் செலவுகளைச் சமாளிப்பதற்கும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும்



முடியாதவர்களாக இப்பகுதி மக்கள் காணப்படுகின்றனர்.

வேலையின்மையும் வறுமையும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டதாகவே காணப்படுகின்றன. குடும்பத் தலைவர் அல்லது உழைக்கக்கூடிய நபர் வேலையின்றி இருக்கும்போது அக்குடும்பம் வறுமையால் வாடுகின்றது. இப்பிரதேச மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியின் முன்னால் உள்ள ஒரு பாரிய சவாலாக வேலையில்லாப் பிரச்சினை காணப்படுகின்றது. இப்பிரச்சினையானது மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவினுள் மட்டுமல்லாது மட்டக்களப்பு மேற்குப் பிரதேசத்தில் அவதானிக்கப்பட்ட ஒரு பொதுவான பிரச்சினையாகவும் காணப்படுகின்றது.

கிராமங்களின் சொத்தாகவுள்ள ஊழியவளம் பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்ற வேறு பிரதேசங்களை நோக்கி நகரும் நிலையினை இங்கு காணக்கூடியதாக உள்ளது. படுவான்கரைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் தொழில் தேடி பொலன்னறுவை, தம்புள்ள, அனுராதபுரம், மன்னார், யாழ்ப்பாணம் போன்ற தூரப் பிரதேசங்களை



நோக்கி நகர்வடைகின்றனர். தொழிலாளர் நகர்வானது தற்காலிகத் தொழில் வாய்ப்பினை வழங்குகின்ற போதிலும் சமூக பொருளாதாரத் தளங்களில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

## சில தீர்வாலோசனைகள்

வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக வறுமை மற்றும் பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் இப்பிரதேச மக்களின் பிரச்சினைகள் குறுங்காலத்தில் முழுமையான தீர்வினை எட்டமுடியாத ஒன்றாக காணப்படினும் நீண்டகாலத்தைக் கருத்திற் கொண்டு வகுக்கப்படும் பொருத்தமான அபிவிருத்திக் கொள்கைகள் மூலம் இதற்கு சரியான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்தவகையில் பிரதேசத்தின் வளம் மற்றும் வாய்ப்புக்களை கருத்திற் கொண்டு சில தீர்வாலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

இப் பிரதேசமானது விவசாயத்தினை மேற்கொள்வதற்கான விவசாய நிலங்களை மட்டுமன்றி ஊழியச் செறிவையும் கொண்டுள்ளது. எனவே இவ்வளங்களைக் கருத்திற் கொண்டு இவற்றை முழுமையாக பயன்படுத்தி அதன் மூலம் ஆகக்கூடிய வெளியீட்டைப் பெறுதல் அவசியமாகும். அதாவது இங்கு அதிகளவில் நெல்லுற்பத்தி செய்யப்படுவதனால் அதனைக் கருத்திற் கொண்டு பாரிய அரிசி ஆலை ஒன்று அமைக்கப்படுமிடத்து

வேலையற்று இருக்கும் அதிகளவான ஊழியப்படைக்கு தொழில்வாய்ப்பினை வழங்கமுடியும்.

ஊழியச்செறிவு மிக்க இவ்வாறான தொழிற்றுறைகளை கிராமிய மட்டங்களில் விருத்தி செய்தல் வேண்டும். அவை விவசாயம் மற்றும் விவசாயமல்லாத் துறைகளில் ஊழியர்களுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்யும் உபாயங்களாக இருத்தல் வேண்டும். வியாபாரம், சேவைகள் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். இவ்வாறான நிலைமை ஏற்படுத்தப்படும் பொழுது கிராமிய வறுமை மற்றும் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணமுடியும். இதன் மூலம் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

பிரதேசத்தில் காணப்படும் விவசாயத்திற்கு ஏற்றவகையில் காணப்படாத நிலங்கள் விவசாயச் செய்கையினை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். கிராமிய மட்டத்தில் உள்ள குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் என்பவற்றை புனரமைப்புச் செய்வதன்



மூலம் கிராமிய மட்டத்தில் களப்பயிர்ச் செய்கையினை ஊக்கிவிக்க முடியும். இதன் மூலம் சிறந்த பயனைப்பெற விவசாய முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்குதல் பயனுடையதாக அமையும். அத்துடன் உற்பத்தித்திறன் குறைந்த விவசாயத் துறையிலிருந்து கூடிய உற்பத்தித்திறன் வாய்ந்த கைத்தொழிற்றுறைக்கும் சேவைகள் துறைக்கும் ஊழியர்களை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் நீண்டகாலத்தில் இடம்பெறுதல் வேண்டும்.

ஊழியச் சந்தையானது பயிற்சி பெற்ற ஊழியர்களையே அதிகம் வேண்டி நிற்கின்றது. இப் பிரதேசத்தில் காணப்படும் ஊழியர்களில் பெரும்பாலானோர் தேர்ச்சி பெறா ஊழியர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் இவர்களால் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வது மிகக் கடினமானதாக காணப்படுகின்றது. எனவே பொருத்தமான தொழிற்றுறைகளில் அவர்களால் விரும்பப்படுகின்ற தொழில்சார் பயிற்சிகளை அளிப்பதன் மூலம் பிரதேசத்தில் வேலையின்மையினை குறைக்க முடியும்.

சில தொழில்கள் பருவகாலத் தொழில்களாக காணப்படுவதால் பருவகாலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பலர் தொழிலற்று இருக்கின்றனர். இக்காலங்களில் வீட்டுத்தோட்டம் மற்றும் சுயதொழில்களில் ஈடுபடுதல் சிறந்ததாகும். 167ற்கும் மேற்பட்ட

யுத்த விதவைகள் (source: resource proPle , divisional secretariat MN, 2010) காணப்படும் இப்பிரதேசத்தில் பெண்தலைமைக் குடும்பங்களில் அதிக வறுமைநிலை காணப்படுகின்றது. இவர்களில் பலர் தொழிலின்றி அல்லற்படுகின்றனர். எனவே சுயதொழில் ஒன்றினை மேற்கொள்ளும் போது இவர்களால் போதிய வருமானத்தினைப் பெறமுடியும். சுயதொழில் ஊக்கிவிப்புக்கான கடன்கள் மற்றும் உதவிளை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சரியான பயனாளிகளை இனங்கண்டு வழங்குவதன் மூலம் சிறுவியாபார முயற்சிகளை ஊக்கிவிப்பதனூடாக பிரதேசத்தில் வறுமை நிலையினைக் குறைக்க முடியும். செயற்றிறனான கடன் திட்டங்கள் புதியதொழில் முயற்சிகளை அதிகரித்து தொழிலின்மை வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் ஒரு வழிமுறையாக அமையும்.

பின்தங்கிய கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தல் வேண்டும். இதன் மூலம் உள்நாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ள ஊக்கமளிக்கப்படுவர்.



இதனால் அதிக தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும். உட்கட்டுமானங்களின் துரித வளர்ச்சி வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் கவர்ந்திழுத்து பிரதேச அபிவிருத்திக்கு பங்களிப்பு நல்கும் என்பதில் ஐயமெதுவுமில்லை. இளைஞர் யுவதிகளின் தொழில் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு தொழில் பயிற்சி நிலையங்கள் கிராமப் பகுதிகளை நோக்கி விஸ்தரிக்கப்படுதல் வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கு இணைப்பாட விதானமாக தொழில்சார் கல்விகள் முக்கியப்படுத்தப்படுதல் அவசியமாகும். இதனால் உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்காத மாணவர்கள் சுயதொழில் ஒன்றில் ஈடுபட வழிப்படுத்தப்படுவர்.

பொருத்தமானதும் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டதுமான சமூகவலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை வறுமையில் உள்ள கிராமங்களில் நடைமுறைப்படுத்தல் வேண்டும். வறுமை பற்றிய விழிப்புணர்வு, சுயநம்பிக்கை, குழு வேலையாற்றல் போன்ற அம்சங்களை இச்செயற்றிட்டங்கள் மூலமாக கிராமிய மக்களுக்கு உட்புகுத்த முடியும். அவை கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்ய உதவும். அத்தோடு கிராமிய மட்டத்தில் திட்டமிடலில் மக்களின் பங்குபற்றலை அதிகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அவசியமாகும்.

பாடசாலையில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவதை தடுத்து நிறுத்தும்

பொருட்டு பெற்றோர் மற்றும் பாதுகாவலர் மத்தியில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துவதற்கு கல்விசார் அமைப்புக்கள் முன்வரவேண்டும். இதனால் இப்பிரதேசத்தில் மனித மூலதன விருத்தியின் மூலம் நிலைபேறான பிரதேச அபிவிருத்தியினை நீண்டகாலத்தில் அடைய முடியும் என்பது திண்ணமாகும்.

மண்முனை வடக்குப்பிரதேசத்தில் காணப்படும் வேலையில்லாப் பிரச்சினைகள் மற்றும் வறுமையினை குறைப்பதற்கு வகுக்கப்படும் அபிவிருத்திக் கொள்கைகள் பிரதேசத்தின் முக்கிய பிரச்சினைகளை முதன்மைப் படுத்தியிருத்தல் அவசியமாகும். அத்துடன் பொருளாதார விரிவாக்கமானது புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் ஆற்றல் மிக்கது என்ற அடிப்படையில் இவ்விரிவாக்கத்தின் நன்மைகள் வறுமை நிலையில் வாழும் கிராமப் புறங்களுக்கு நன்மை பயக்கும் ஒன்றாகவே அமையும்.




யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில் இத்திட்டங்களுடாக இப்பிரதேச மக்களின் பல்வேறு சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகள் காணப்படுதல் அவசியமாகும். கிராமங்கள் தோறும் ஏற்படுத்தப்படும் அபிவிருத்தியானது பிரதேச அபிவிருத்திக்கு உந்து சக்தியாக அமைவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு மேலும் பலம் சேர்க்கும் ஒன்றாக அமையும்.

## மின்சாரம் வேண்டாம்

உலகெங்கிலும் உள்ள நடுத்தர மக்களுக்கு பயன்படும் வகையில் மின்சாரம் இல்லாத பகுதிகளில் இயக்கக்கூடிய கையால் இயக்கும் வகையிலான வாசிங் மெஷினை கண்டுபிடித்த பிரிட்டிஷ் சீக்கிய பொறியாளர் நவ்ஜோத் சாவ்னிக்கு இங்கிலாந்தின் பிரதமர் ரிஷி சுனக்கின் பாயிண்ட்ஸ் ஆ.ஃப் லைட் விருது கிடைத்துள்ளது.






காதல் கதைக்காக ஒரு மாதமாக காத்திருந்தவர்களே... இதோ... இந்த காதலைக் கொண்டாடும் மாதத்தில் எங்கள் பரதன் கௌசல்யா காதலின் கதையைக் கேளுங்கள். ஆனால் முன்னரே சொன்னது போல் இந்த காதல் கத்தரிக்காய் இன்னும் முத்தவில்லை. ஆக, சந்தைக்கு கொண்டுவந்து விடாதீர்கள்.

சினிமாக் காதல்கள் போல கண்டதும் கருவுற்றதல்ல இந்தக் காதல். படிப்படியாக உருப்பெற்ற காதல் இது. மண்ணில் விழுந்த விதையை முளைக்க வைக்கும் மழை நாள் ஒன்றில் தான் அவர்கள் காதலுக்கான விதையும் முளைவிட்டது.

பாடசாலை சென்றுவிட்டு கௌசல்யா தன் நண்பியுடன் வரும் வழியில் நல்ல மழை. சைக்கிளை மகிழ மரத்தடியில் நிறுத்திவிட்டு மகிழ மரக்குடையில் இடைக்கிடையே விழும் மழைத்துளிகளை மட்டும் வாங்கிக்கொண்டு தோழியர் இருவரும் நனைந்திருந்தார்கள்.

தீக்காயங்களுக்கு தீர்வாக என்றாவது பயன்படும் என்று பரமு மழைத் தண்ணீரை சேமிப்பது வழமை. அதற்காக பானை ஒன்றை கொண்டுவந்து முற்றத்தில் வைத்த போது தான் படலை வாசலில் பள்ளி உடையில் பெண் பிள்ளைகள் இருவர் நனைந்து கொண்டிருப்பதை பார்த்தாள். விடாமல் கொட்டிய மழையில் அவர்கள் முகம் சரியாக தெரியவில்லை. வாங்கில் கிடந்த இன்னொரு குடையையும் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு அருகில் சென்ற போதுதான் அய்யர் வீட்டு கௌசல்யாவை அடையாளம் கண்டுகொண்டாள். உயரம் பெரிதாய் இல்லை. . நிறமும் பெரிதாய் இல்லை. ஆனால் பூத்திருந்த முகம் கௌசல்யாவுக்கு பேரழகைக் கொடுத்தது. கோயிலில் கௌசல்யா பஞ்சபுராணம் பாடும்போது பரமு பலதடவை பார்த்திருக்கிறாள். பரியாரியார் வீட்டுக்கு மருந்துக்கு அம்மாவோடு வரும் போது கௌசல்யாவும் பரமுவை பார்த்திருக்கிறாள். மற்றக் குடையை கொடுத்து அவர்களை பரமு வீட்டிற்குள் அழைத்து வந்தாள்.

நனைந்திருந்த நங்கையர் இருவரின் தலையையும் துவட்டிக்கொள்ள

துணிகளைக் கொடுத்த பரமு சுடச்சுட தேநீர் கொடுக்க நினைத்தாள். ஆனால் அய்யர் வீட்டுக்காரர் அடுத்த வீட்டில் எதுவும் குடிப்பதில்லையே? தான் கொடுத்து அவர்கள் வேண்டாமென்றால் என்ன செய்வது? எதற்கும் கேட்டுப்பார்ப்போம் என்று கேட்டாள்.

“அதெல்லாம் வேணாம் அன்ரி… உங்களுக்கு ஏன் வீன் கரைச்சல்?”

அந்த பதில் என்ன அர்த்தத்தில் சொல்லப்பட்டதென்பது என்பது கௌசல்யாவுக்கு மட்டும் தான் தெரியும். அதே போல அந்த பதில் என்ன அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட்டதென்பதும் பரமுவுக்கு மட்டும் தான் தெரியும். இந்த சாதீயம் தரும் சங்கடங்களில் இதுவும் ஒன்று. ஆனால் வீடு தேடி வந்தவர்களுக்கு தண்ணீர் கொடுக்காமல் இதுவரை அனுப்பாத பரமுவால் திரும்ப



வற்புறுத்த முடியவில்லை. பரமு தன்னை தாழ்ந்தவளாக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஏதும் பேசாமல் கௌசல்யாவை பார்த்தாள்.

ஆனால் அவளோ அங்கிருந்த சுவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கே சுவர்களில் வரைந்திருந்த ஓவியங்களில் தன்னை மறந்தவளாக அவற்றை கௌசல்யா ரசித்துக் கொண்டிருந்தாள். தன் மகன் வரைந்த ஓவியங்களை ஒருத்தி ரசித்துப் பார்ப்பதைப் பார்த்த பரமு சற்றே கர்வமுறத் தொடங்கினாள்.

”இதெல்லாம் என் மகன் பரதன் கீறினது. எந்த சுவரையும் சும்மா இருக்க விடமாட்டான். ஸ்கூல்ல.. தங்கப்பதக்கம் எல்லாம் வாங்கி இருக்கிறான்.”

கௌசல்யா கேட்காமலே தானாகவே பரமு சொல்லிக் கொண்டாள். அவள் முகம் முழுவதும் பூரிப்பு. மகனின் கலை அவளை இப்போது சற்று உயரத்தில் வைக்க வைத்துவிட்டது. ஒரு இயல்பான சந்திப்பை சாதி ஏற்றத்தாழ்வுகள் எப்படிப் பாதிக்கிறது பார்த்தீர்களா? அய்யர் வீட்டுப் பெண் வந்ததிலிருந்து எல்லாவற்றையும் சாதீயக் கண்ணோடே பார்க்கிறாள் பரமு. ஆனால் அந்த அய்யர் வீட்டு பெண்ணோ கலைக்கண்ணோடு அந்த ஓவியங்களில் ஒன்றித்துப் போயிருந்தாள்.

மழையோடு விளையாடியபடியே வீடு வந்த பரதனுக்கு தன் ஓவியங்களை ஒருத்தி வைத்த கண் வாங்காமல்

பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்ததும் அதிர்ச்சி. நனைந்து போய் வந்திருந்த மகனை தன் திட்டல்களால் பரமு துவட்டினாள். ஒரு பெண்ணுக்கு முன்னால் தன்னை அம்மா திட்டுவது பரதனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அது பரமுவுக்கும் விளங்கிவிட்டது.

"ஏம்மா கௌசல்யா.. நீ இவ்வளவு நேரமும் ரசிச்ச ஓவியங்களை கீறினவன் இவன்தான் மா"

அறிமுகப்படுத்தி வைத்தாள் பரமு. சட்டென்று இருவரும் ஒரு தடவை கண்களால் பார்த்துக் கொண்டார்கள்.

"அட... இவளா..."
"அட... இவனா..."

இருவருமே நினைத்துக் கொண்டார்கள். ஆனால் சொல்லவில்லை. ஏற்கனவே ஒருவரை ஒருவர் பலதடவை கண்டிருக்கிறார்கள். ஆனால் முகவரியோடு அறிமுகமாவது இன்று தான்.

மழைநாளில் முளைவிட்ட அந்த சந்திப்பு மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது. பரதனின் ஓவியங்களைப் பிடித்த கௌசல்யாவுக்கு பரதனையும் பிடித்துக் கொண்டது. ஆனால் அந்த அன்புக்கு என்ன பெயர் வைப்பதென்று தெரியவில்லை. வயதுக் கோளாறுகளின் சேட்டைகள் பற்றி வீட்டில் ஆச்சி அடிக்கடி பாடம் எடுத்ததால் அவள் அந்த அன்புக்குள் தன்னை சிறைப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் நாளாக நாளாக பரதன் மீதான அவள் அன்பு அவளை அறியாமலே அவளை ஆட்கொள்ளத் தொடங்கியது.

தன் வீட்டுச் சுவர்களிலும் ஓவியம் வரையுமாறு அழைத்து வீட்டாருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். ஏன் பரதனை வீட்டாருக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும்? அவளுக்கே இதற்கான விடை தெரியவில்லை. குழப்பமாக இருந்தது. அவளது கட்டுப்பாட்டுக்குள் அவள் இல்லை. அப்படியென்றால் அவளை இயக்குவது யார்?

இதை நிலமைதான் பரதனுக்கும். அவள் வீட்டில் அழைத்து ஓவியம் வரையச் சொன்ன போது அவன் வரைந்த ஓவியங்களில் ஒன்று மழையில் மரத்தடியில் நனைந்து நின்ற குயில் ஒன்று. கௌசல்யா நன்றாக பாடுவாள். அவளின் குரல் அவனுக்கு அவ்வளவு பிடிக்கும். அவளை சிங்காரக்குயில் என்றுதான் பரதன் அழைப்பான். சிங்காரக்குயிலை கௌசல்யா வீட்டில் சித்திரக்குயிலாக்கி காதலை அடையாளப்படுத்திக் கொண்டார்கள் இருவருமே. ஆனால் இருவருமே வெளிப்படுத்தவில்லை.

நாட்கள் நகர்ந்துகொண்டே சென்றன. காதலும் வலுத்துக்கொண்டே சென்றது. பாரம் தாங்காமல் ஒருநாள் போட்டுடைக்கப்பட்டது. எதிர்பார்த்தவைதான் நடந்ததா? எதிர்பாருங்கள்..

**குயில் கூவும்.**

# அழிவின் கடிகாரம்



“உலகின் அழிவு நாள்“-ஐ குறிக்க ஆங்கிலத்தில் டூம்ஸ் டே என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மனித இனத்திற்கு எச்சரிக்கை அளிக்கும் விதமாக புல்லட்டின் ஆ.்.ப் அட்டாமிக் சயின்டிஸ்ட் என்ற விஞ்ஞானிகளின் கூட்டமைப்பு 1947ஆம் ஆண்டில் டூம்ஸ் டே கடிகாரம் என்ற கடிகாரத்தை வடிவமைத்தனர். அல்பெர்ட் ஐன்ஸ்டீன் உள்ளிட்ட முன்னணி விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து வடிவமைத்த இந்த கடிகாரம் உலகின் போக்கு எவ்வாறு உள்ளது என்பதை பிரதிபலிக்கும்.

ஆண்டுதோறும் உலகின் முன்னணி விஞ்ஞானிகள் இந்த கடிகாரத்தின் முள்ளை மாற்றி அமைப்பார்கள். இந்த டூம்ஸ் டே கடிகாரத்தில் மணி நள்ளிரவு 12ஐ தொட்டால் உலகம் அழிவு தினத்தை அடைந்துவிட்டது எனப் பொருள். கடிகார முள் 12 மணிக்கு அருகே இருந்தால் உலகின் நிலை மோசமாக இருப்பதாக பொருள். எவ்வளவு தொலைவில் இருக்கிறதோ, அவ்வளவு நலமாக உலகம் செயல்படுகிறது என்று கருதப்படும். இந்நிலையில், இந்தாண்டு கடிகார முள்ளை விஞ்ஞானிகள் 12 மணிக்கு மிக நெருக்கமாக வைத்துள்ளனர். அதன்படி, கடிகார முள் 12 மணியை நெருங்க 90 நொடிகளே உள்ளன. இதன் மூலம் உலகம் அழிவுக்கு அருகே உள்ளதாக எச்சரிக்கை தெரிவித்துள்ளனர்.

கோவிட் பரவல், ர்‘யா-உக்ரைன் போர், பருவநிலை மாற்றம் என பல நெருக்கடிகளை உலகம் சந்தித்து வருவதால் மிக மோசமான சூழல் நிலவுவதாக விஞ்ஞானிகள் கடிகார முள்ளை இவ்வளவு நெருக்கமாக மாற்றி அமைத்துள்ளனர். இதற்கு முன்னர் சோவித் ரஷ்யா - அமெரிக்கா இடையே பனிப்போர் உச்சத்தில் இருந்த போது தான் கடிகார முள் நெருக்கமாக இருந்துள்ளது. பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர் இத்தகைய பீதி குறைந்தது.

2020ஆம் ஆண்டில் 100 நொடிகள் தள்ளி வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 10 நொடிகள் குறைத்து 90 நொடிகளில் வைக்கப்பட்டுள்ளது.உலக நாடுகளின் போர் தாக்குதல்கள், கால நிலை மாற்றம் போன்றவற்றை அனைவரும் ஒன்றிணைந்து சீர் செய்தால் மட்டுமே மனித இனம் நலமுடன் வாழ முடியும் என விஞ்ஞானிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜெ. சிவச்சித்ரா

*ஆய்வு அரசர்கள் போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற ஆய்வு*




# கள்ளப்பாடு மக்களின் அல்லற்பாடுகள்

2004 ஆம் ஆண்டில் சுனாமியால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகிய பகுதியாக கள்ளப்பாடு பிரதேசம் காணப்படுகின்றது. சுனாமி ஏற்பட்ட போது அப்பிரதேசத்திலிருந்து வெளியேறுவதற்கான பாதை இல்லாதது அதிகளவான உயிர்களை காவு கொள்ள காரணமாக அமைந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கள்ளப்பாடு எனும் பிரதேசத்தில் அதிகளவான மீனவ சமூகத்தினர் வாழ்ந்து வருவதுடன் இப்பிரதேசமானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிராமமாக காணப்படுகின்றது. இங்கு தெற்கு பகுதியில் 530 குடும்பங்களும் வடக்கில் 180 குடும்பங்களும் உள்ளன. மொத்தமாக அண்ணளவாக 700 மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இவற்றில் அதிகம் வறுமை கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்டதால் மக்கள் உடைமைகளையும், உயிர்களையும் இழந்தமையே காரணமாகும்.

இங்கு இறால் குளம் காணப்படுவதினால் சுற்றுச்சூழல் பெறுமதி வாய்ந்த பிரதேசமாக காணப்படுகின்றது . இறால் குளமானது எதிரே இந்து சமுத்திரத்தையும் முல்லைத்தீவு நகரத்தில் சிலாவத்தை வரை கிட்டத்தட்ட மூன்று கிலோ மீட்டர் வரையும் வாய்க்காலுடன் காணப்படுகின்றது.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட வெளியேற்றுகை பாதை பாவனைக்கு உரிய முறையில் அமைக்கப்படவில்லை இதனால் பொதுச்சேவைகளை (பாடசாலை வைத்தியச்சேவை ) மக்கள் பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.



அதுமட்டுமல்லாது அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்வதில் காலதாமதம் ஏற்படுவதனால் அதிகமான இறப்புக்களும் ஏற்படுகின்றது. இதற்கு காரணம் இறால் குளத்தின் ஊடாக ஒரு பாதுகாப்பான பாலம் இல்லாமையே ஆகும்.

கள்ளபாடப் பிரதேசத்தில் காணப்பட்ட பாடசாலை சுனாமி ஏற்பட்டதன் பின்னர் உன்னாப்பிலாவிற்கு மாற்றப்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் பாடசாலை செல்லமுடியாத நிலை காணப்படுகின்றமை பாடசாலை மாணவர்கள் அண்ணலவாக மூன்று கிலோமீட்டர் பயணம் செய்தே பாடசாலைக்கு செல்ல வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமல் வீடுகளில் உள்ளனர் அதிகமான மாணவர்கள் பாடசாலை இடை விலகளிலும் காணப்படுகின்றனர். இதனால் மாணவர்களுடைய எதிர்காலம் பாதிப்புக்கு உள்ளாகின்றது.

இப்பிரதேசத்திற்கான சுனாமி வெளியேற்ற பாதை 180 மீட்டர் மாத்திரம் அமைக்கப்படுமாக இருந்தால் மூன்று கிலோமீட்டர் சுற்றி பயணிக்க வேண்டிய தேவை இருக்காது. மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் எதுவித சிரமமும் காணப்படாது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சுனாமி வெளியேற்ற பாதையை அமைத்துத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. இருப்பினும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை தற்போது தற்காலிகமாக போடப்பட்ட அணையில் ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று நான்கு விபத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

மேலும் இக்குளப் பகுதியினை சுற்றுலாத்தலமாக மாற்றுவதன் மூலம் இங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரம் உயர்வையும். அத்துடன் இக்குளம் சார்ந்த பகுதியினை முறையாக பராமரிப்பதன் மூலம் இயற்கை சூழலில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் சேவைகளை அதிக அளவில் நுகரக்கூடிய வாய்ப்பு காணப்படும்.

இறால் குளம் ஆனது நன்னீர் மீன் பிடி மேற்கொள்ளப்படும் வளம்மிக்க பகுதியாக காணப்படுகின்றது. நன்னீர் மீன் பிடிக்கும் குளம்



காணப்படுகின்றதால் அதிகளவான மீனவர்கள் அவர்களது பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்து வறுமை நிலையிலிருந்து விடுபடவும் முடியும். இப்பிரதேசத்தில் குளம் சார்ந்த நீரேந்து பிரதேசம் பராமரிக்கப் படாமையால் அங்கு நன்னீர் சூழல் தொகுதி பாதிக்கப்படுகின்றது. குளத்திற்கு குறுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மண் பாலத்தினால் நந்திக்கடல் பகுதிக்கு செல்லும் நீரோட்டம் தடைப்படுவதால் அச்சுழல் தொகுதியில் காணப்படும் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.



சுனாமி வெளியேற்ற பாதை அமைப்பதற்கு அது தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்திற்கு இந்த விடயத்தை கொண்டு செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது.

## சாதனை நாய்

நாய்கள் பொதுவாக 10 முதல் 15 ஆண்டுகள் வரை அதிகபட்சம் உயிர்வாழும். ஒரு சில நாய் இனங்கள் 15 முதல் 20 ஆண்டுகள் வரை தாக்குப்பிடிக்கும். 23 ஆண்டுகள் வாழ்ந்து வரும் அமெரிக்க நாய் ஒன்று கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

ஸ்பைக் என்று பெயரிடப்பட்டுள்ள சிவாவா இன கலவை நாய் ஒன்று 23 ஆண்டுகள் 7 நாட்கள் வாழ்ந்து உலக சாதனை பிடித்துள்ளது. பொதுவாக சிவாவா இனத்தில் உள்ள நாய் 12-18 ஆண்டுகள் உயிர் வாழும். அதன் கலப்பு இனங்கள் கொஞ்சம் கூடுதல் நாட்கள் உயிரோடு இருக்கும்.




லாஸ் ஏஞ்சல்ஸில் 2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ,ஜினோ என்ற 22 வயதான சிவாவா கலப்பு நாய் , உலகின் மிக வயதான நாய் என்று பெயரிடப்பட்டது. அதன் பின்னர் ஓஹியோ மாகாணத்தில் உள்ள ஸ்பைக் அந்த சாதனையை முறியடித்துள்ளது.



# உடலை உருக்குலைக்கும் போதைப்பொருட்கள்

**நெய்வேந்திரம் வஜிதா**

உலக நாகரிகம் வளர்ச்சி பாதையில் செல்கின்ற அதே தருணத்தில் சில தீய பழக்கங்கள் வலிமை பெற்றுச் செல்கின்றது. குறிப்பாக போதைப்பொருள் பாவனை என்பது சமூகத்தில் அதிகளவில் காணப்படுகின்றது. போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் செயற்பாடுகளை ஒழிக்க அதிக நாடுகள் முயற்சித்தும் இவை இரண்டும் குறைந்தபாடில்லை. இவைகளின் தாக்கம் அதிகரித்து கொண்டே செல்கின்றது.

மது மற்றும் போதை பொருட்களில் உடல்நலனுக்கு பாதிப்பினை உண்டாக்குகிற, அப்பழக்கத்தைத் தூண்டுகிற வேதிப்பொருட்கள் அதிக அளவு கலப்பதால் பெரும்பாலானோர் போதை நோயாளிகளாக மாறுவதோடு மன நோயாளிகளாகவும் மாறுகின்றனர். உலக அளவில் தற்போது போதைப் பொருள் பயன்பாடு மிகவும் கடுமையான சுகாதார பிரச்சினையாக உள்ளது. இப்படி போதைப்பழக்கம் சமூகத்தின் சாபக்கேடாக மாறிவருகிறது. உலகம் முழுவதும் 2.30 கோடி மக்கள் பல்வேறு வகையான போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதாக ஐக்கிய நாடுகளின் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. நகர்ப்புறங்களில் சிகரெட், மது மற்றும் போதைப் பொருள் பழக்கமானது ஆண்கள் மட்டுமின்றி பெண்களிடத்திலும் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒருவர் தன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண குடி மற்றும் போதைப் பொருட்களை நாடுகிறாரோ, அவருக்கு



பிரச்சினை ஏற்படும் போதெல்லாம் அந்தப் பொருட்களின் துணையுடனே அவர் தீர்வு காண முயற்சிக்கும் நிலை ஏற்படுகிறது. இப்படி ஏதோ ஒரு விதத்தில் ஒரு போதைப் பொருளை முதலில் பயன்படுத்தத் தொடங்கியவர்கள் நாட்கள் செல்லச் செல்ல அடுத்தடுத்து எல்லா வகையான போதைப் பொருட்களையும் பயன்படுத்திப் பார்க்கவிரும்புகிறார்கள். போதைப் பொருள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகை வேதிப்பொருள் உள்ளது. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான உணர்வும், சந்தோஷமும் கிடைப்பதாக அதைப் பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர்.

போதைக்கு அடிமையாகிவிட்டால் சொந்த வீட்டிலேயே திருடுதல், பொருட்களை எடுத்து அடகு வைப்பது, பிச்சை எடுப்பது, அசிங்கமாக நடந்துகொள்வது, பிறரை துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். வெளியிடங்களில் அடிதடி, கொலை, கொள்ளை, தீவிரவாதம் மற்றும் பாலியல் தொந்தரவுகள் செய்வது போன்ற வன்முறை செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.



இத்தகைய பழக்கங்களுக்கு ஆளானவர்களுக்கு நாளடைவில் மூச்சுத்திணறல், சளி, இருமல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதோடு, உணவுக்குழாயிலும், கணையத்திலும், கல்லீரலிலும் பாதிப்பு ஏற்படுகிறது. சரியாக உணவு எடுத்துக்கொள்ள முடியாமல் போவதால் வயிற்றில் புண், எடை குறைவு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, உடல் சோர்வு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதைத் தொடர்ந்து மூளையில் ஏற்படும் பாதிப்புகளால் தானாகவே பேசிக்கொள்வது, பயம், மனச்சோர்வு, மனக் குழப்பம் போன்ற பிரச்சினை உண்டாகிறது.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது, முடிவெடுப்பதில் சிக்கல், சிந்தனைத்திறன் குறைவு, ஞாபகமறதி, தனக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்று கற்பனை செய்துகொண்டு அதன்படி நடந்து கொள்வது போன்ற மனநல பிரச்சினைகளும் ஏற்படுகிறது. மது உடலின் உள்ளே செல்லச் செல்ல நம் உடலிலுள்ள வைட்டமின்களை அது அழித்து விடுகிறது.

மேலும் கல்லீரல், சிறுநீரகம், இதயம் சார்ந்த பிரச்சினைகளும், கொலஸ்ட்ரால், நீரிழிவு, ரத்த அழுத்தம் சார்ந்த பிரச்சினைகளும் உண்டாகிறது. தற்போது மது மற்றும் போதை பொருட்களில்

உடல்நலனுக்கு பாதிப்பினை உண்டாக்குகிற, அப்பழக்கத்தைத் தூண்டுகிற வேதிப்பொருட்கள் அதிக அளவு கலப்பதால் பெரும்பாலானோர் போதை நோயாளிகளாக மாறுவதோடு மனநோயாளிகளாகவும் மாறுகின்றனர். போதை மற்றும் குடிப்பழக்கம் உடையவர்கள் செய்கிற குற்றச் செயல்களால் முதலில் குடும்ப உறுப்பினர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சமூகத்தில் மரியாதை குறைவு, சமூகப் புறக்கணிப்பு மற்றும் பணப் பிரச்சினைகளும் உண்டாகிறது.

மன ரீதியான பிரச்சினைகள் ஏற்படும். மூளையில் ஏற்படும் பாதிப்புகளால் தானாகவே பேசிக்கொள்வது, பயம், மனச்சோர்வு, மனக் குழப்பம் போன்ற பிரச்சினைகள் உண்டாகின்றது.

சிந்தனைத்திறன் குறைவு, ஞாபகமறதி, தனக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்று கற்பனை செய்துகொண்டு அதன்படி நடந்து கொள்வது போன்ற மனநல பிரச்சினைகளும் ஏற்படுகிறது. குடும்ப நபர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

போதை மற்றும் குடிப்பழக்கம் உடையவர்கள் செய்கிற குற்றச் செயல்களால் முதலில் குடும்ப உறுப்பினர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். விபத்துக்கள் ஏற்படுகின்றன. வாகனம் ஓட்டுபவர்கள் போதையைப் பயன்படுத்துவதால் கவனம் சிதைந்து விபத்துக்களுக்கு உள்ளாகி உயிர் இழப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. அது மட்டுமன்றி சொத்திழப்புக்கள், அவயவங்கள் இழப்புக்களும் ஏற்படுகின்றன.

சமூக அந்தஸ்து இழக்கப்படுகின்றது. போதை மற்றும் குடிப்பழக்கம் உடையவர்கள் செய்கிற குற்றச் செயல்களால் சமூகத்தில் மரியாதை குறைவு, சமூகப் புறக்கணிப்பு என்பவை ஏற்படுகின்றது.

போதைப் பொருட்பாவனைகள் என்பது தனிமனிதன் மட்டுமல்ல சமுதாயத்தையும் தாண்டி நாட்டிற்கும் கேடு விளைவிக்கின்றன. எனவே இதனை தடுத்து நிறுத்தி முழுதாக ஒழிக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான வாழ்விற்கு போதைப்பாவனை பெரிதும் தடையாக உள்ளது என்பதனை அனைவரும் உணர வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனது உள்ளத்திலும் நற்சிந்தனைகளை ஏற்படுத்தி சீர் செய்வதே ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான தீர்வாகும்.



எஸ்.எஸ்.நுஜன்



# ஐசிசி விருதுகள் – 2022

2022ம் ஆண்டுக்கான சர்வதேச துடுப்பாட்ட சபையின் (ICC) விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக விளையாடும் வீரர்களுக்கு பல பிரிவுகளில் ஐசிசி விருதுகள் வழங்கப்படும். அத்துடன் வருடத்திற்கு அணிகளும் தேர்வு செய்யப்படும். சிறந்த ஆண் துடுப்பாட்ட வீரருக்கான விருது Sir Garfield Sobers Trophy என்ற பெயரிலும் சிறந்த பெண் துடுப்பாட்ட வீரருக்கான விருது Rachael Heyhoe Flint Trophy என்ற பெயரிலும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை தொடர்பான முழுமையான விடயங்களையும் தாங்கிய பதிவாக இக்கட்டுரை.

முதலில் தெரிவு செய்யப்பட்ட அணிகளை பார்ப்போம். அதன்படி இம்முறை ஐசிசி யின் ஆண்கள் டெஸ்ட் அணியில் நான்கு அவுஸ்திரேலியா வீரர்கள், மூன்று இங்கிலாந்து வீரர்கள், மற்றும் தலா ஒரு வீரர் இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வணிக்கு இங்கிலாந்து அணித் தலைவரான பென் ஸ்டோக்ஸ் (870 runs at an average of 36.25 and 26 wickets) தலைமை வகிக்க உஸ்மான் ஹவாஜா (1080 runs at an average of 67.50), கிரெக் பரத்வையிட் (687 runs at an average of 62.45), மார்னஸ் லபூஸ்சேன் (957 runs at an average of 56.29), பாபர் அசாம் (1184 runs at an average of 69.94), ஜொனி பெயர்ஸ்டோ மட்டையாளர்களாகவும் பற் கம்மின்ஸ் (36 wickets at an average of just



21.83), நதன் லயோன் (47 wickets at an average of 29.06), கசிகோ ரபாடா (47 wickets at an average of 22.25), ஜேமஸ் அண்டர்சன் (36 wickets at an average of just 19.8) பந்துவீச்சாளர்களாவும் மற்றும் இந்தியாவின் ரிசாப் பான்ட் (680 runs at an average of 61.81 and a strike rate of 90.90 and six stumpings and taking 23 catches)இலக்கு காப்பாளரவும் இடம் பிடித்துள்ளனர்.

ஆண்கள் ஒருநாள் சர்வதேச அணிக்கு பாபர் அசாம் தலைமையில் ரெவிஸ் ஹெட், சாய் ஹோாப், சிரயாஸ் ஐயர், டொம் லதம், சிகான்டர் ரசா, மெஹதி ஹசன், அல்சாரி ஜோசப், மொகமட் சிராஜ், ரென்ட் பொல்ட் மற்றும் ஆடம் சம்பா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஆண்கள் இருபதுக்குஇருபது சர்வதேச அணிக்கு உலக இருபதுக்குஇருபது கிண்ணம் வென்ற இங்கிலாந்து







அணித்தலைவரான ஜோஸ் பட்லர் தலைமை தாங்க மொகமட் ரிஸ்வான், விராட் கோஹ்லி, சூர்யகுமார் யாதவ், கிளின் பிலிம்ஸ், சிகாண்டர் ரசா, ஹர்திக் பாண்ட்யா, சாம் ஹரன், வனித்து ஹசரங்க, ஹரிஸ் ரவ்ஸ் மற்றும் ஜோஸ் லிட்டில் இடம் பிடித்துள்ளனர்.

2022க்கான பெண்கள் சர்வதேச ஒருநாள் துடுப்பாட்ட அணியில் அலஸ்யா ஹேலி, (ஆஸி), ஸ்மிரிதி மந்தனா (இந்தியா), லோரா வோல்வர்ட் (தென்னாப்பிரிக்கா), நெட் ஸ்கேவியர் (இங்கிலாந்து), பெத் மூனி (ஆஸி), ஹர்மன்பிரீட் கவூர் (தலைவி, இந்தியா), அமீலியா கெர் (நியூஸிலாந்து), ஷோப்பி எஸ்கலெஸ்டோன் (இங்கிலாந்து), அயபோங்கா ககா (தென்னாப்பிரிக்கா), ரேணுகா சிங் (இந்தியா), மற்றும் ஷப்னிம் இஸ்மைல் (பாகிஸ்தான்) ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். 2022 இல் பெண்கள் உலகக் கிண்ணம் வென்ற அவுஸ்திரேலிய அணித்தலைவியும்

மிகச்சிறந்த மட்டையாளரில் ஒருவருமான மெக் லெனிங் அணியில் இடம் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

பெண்கள் இருபதுக்கு இருபது அணியில் அவுஸ்திரேலிய மற்றும் இந்திய வீராங்கனைகளின் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. ஸ்மிரிதி மந்தனா, பெத் மூனி, ஷோப்பி டிவைன் (தலைவி, நியூஸி), அஷ் கார்ட்னர் (ஆஸி), தைலா மெக்ராத் (ஆஸி), நிடா தார் (பாகிஸ்தான்), தீப்தி ஷர்மா இந்தியா), ரிச்சா கோஷ் (இந்தியா), ஷோப்பி எஸ்கலெஸ்டோன், இனோகா ரணவீர (இங்கிலாந்து), மற்றும் ரேணுகா சிங் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.




சிறந்த இணை துடுப்பாட்ட வீரர் - Best Associate Cricketer of the Year

ஐசிசி யில் அங்கம் வகிக்கும் 108 நாடுகளில் 12 பிரதான.்.டெஸ்ட் அணிகளும் (Full Member) 96 இணை அணிகளும் (Associate Member) உள்ளன. இந்த விருது இணை அணிகளின் வீரர்களுக்கு ஆனதாகும். இந்த ஆண்டுக்கான ஆண்கள் இணை வீரருக்கான விருது நமீபியா அணியின் ஜெர்ஹார்ட் எராஸ்மஸ்க்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 956 ஓட்டங்களை 56.23 என்ற சராசரியிலும் அத்துடன் 12 இலக்குகளை 27.66 சராசரியிலும் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளில் 306 ஓட்டங்களை 38.25 என்ற சராசரியிலும் அத்துடன் 6 இலக்குகளையும் எடுத்துள்ளார். பெண்கள் இணை வீரருக்கான விருதினை ஐக்கிய அரபு அமீரகத்தின் ஈசா ஓச வென்றுள்ளார்.




சிறந்த வளர்ந்து வரும் வீரர் - Emerging Cricketer of the Year

ஆண்களுக்கான விருதினை தென்னாப்பிரிக்க இளம் புயலான மார்கோ ஜன்சென் (Marco Jansen)




வென்றுள்ளார். 206 சென்டிமீட்டர் உயரமுமான இடதுகை வேகப்பந்து வீச்சாளரான இவர் 36 டெஸ்ட் இலக்குகளை 19.02 சராசரியில் வீழ்த்தியுள்ளார். மட்டையாளராகவும் ஓட்டங்களை எடுத்தமையும் இவருக்கு இந்த ஆண்டுக்கான வளர்ந்து வரும் வீரர் என்ற விருதை கொடுத்துள்ளது. பெண்களுக்கான வளர்ந்து வரும் வீரர் விருதை இந்தியாவின் ரேணுகா சிங் தட்டிச் சென்றுள்ளார். இவர் தேர்வு செய்யப்பட்ட இரு பெண்கள் அணிகளிலும் இடம் பிடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த இருபதுக்கு இருபது சர்வதேச வீரர் விருது - ICC T20I Cricketer of the Year

பெண்கள் துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியாவின் புதிய சகலதுறை வீரரான தைலா மெக்ராத் க்கு கிடைத்துள்ளது. இந்தியாவின் ஸ்மிரிதி மந்தனா, பாகிஸ்தானின் நிடா தார் மற்றும் நியூசிலாந்தின் ஷோப்பி டிவைன் ஆகியோருடன் போட்டியிட்டு வென்றுள்ளார்.

ஆண்கள் இருபதுக்குஇருபது சர்வதேச வீரர் விருதினை இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் பெற்றிருந்தார். ஒரு வருடத்தில் 1000 ஓட்டங்களை எடுத்த இரண்டாவது வீரர் என்ற சாதனையை படைத்தது இந்த ஆண்டுக்கான சிறந்த இருபதுக்கு இருபது சர்வதேச வீரர் விருதை தன்வசப்படுத்தினார்.

சிறந்த ஒருநாள் சர்வதேச வீரர் விருது - ODI Cricketer of the Year

பெண்கள் ஒருநாள் சர்வதேச துடுப்பாட்டத்தில் 2022ம் ஆண்டில் 833 ஓட்டங்களையும் குவித்து 11 இலக்குகளையும் வீழ்த்தி இங்கிலாந்தின் சகல துறை வீராங்கனையான நெட் ஸ்கேவியர், இந்த ஆண்டுக்கான சிறந்த பெண்கள் ஒருநாள் சர்வதேச வீரர் விருதை வென்றார். 2022 பெண்கள் ஒருநாள் சர்வதேச உலக கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா நிர்ணயித்த 357 என்ற இமாலய வெற்றி இலக்கை இங்கிலாந்து துரத்தும் போது ஒருகட்டத்தில் 6 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களை எடுத்திருந்தது இருந்தாலும் ஸ்கேவியர் 121 பந்துகளை எதிர்கொண்டு 148 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழக்காமல் களத்தில்





இருந்தார் இருப்பினும் மறுமுனையில் ஒத்துழைப்பு இல்லாமையால் இங்கிலாந்து தோற்றது.

சிறந்த ஆண்கள் ஒருநாள் சர்வதேச வீரர் விருதை பாகிஸ்தானின் தலைவர் தற்போதைய தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள பாபர் அசாம் தட்டிச் சென்றார். இவர் ஐசிசி ஒருநாள் சர்வதேச அணியின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஆண்கள் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் - ICC Men's Test Cricketer of the Year 2022

இந்த விருதானது இங்கிலாந்தின் சகலதுறை வீரரும் டெஸ்ட் அணி தலைவருமான பென் ஸ்டோக்ஸ் க்கு வழங்கப்படுகிறது. இவருடைய சகலதுறை பெறுபேறுக்கு (870 runs at an average of 36.25 and 26 wickets at an average of 31.19) மட்டுமின்றி இங்கிலாந்தின் பயிற்சியாளரான பிரெடன் மக்கெலம் உடன் இணைந்து பாஸ்போல் "BazBall" எனப்படுகிற டெஸ்ட் கிரிக்கெட்டில் - கிட்டத்தட்ட பந்துக்கு ஏற்ற ஓட்டங்கள் என்று - அடித்து ஆடுகின்ற ஆக்ரோஷமான ஆட்ட யுக்தியை புகுத்தி 2022 இல் 10 போட்டிகளில் 9 இல் வென்று (குறிப்பாக பாகிஸ்தானில் பெறப்பட்ட டெஸ்ட் தொடர் வெற்றி) அணித் தலைவராகவும் ஜொலித்தமைக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த பெண்கள் துடுப்பாட்ட வீரர் - Rachael Heyhoe Flint Trophy for ICC Women's Cricketer of the Year 2022

2022 இல் பந்து வீச்சாளராகவும் மட்டையாளராகவும் சிறந்த பெறுபேறுகளை (1346 runs and 22 wickets from 33 international matches) கொடுத்த இங்கிலாந்து அணித் தலைவியான நெட் ஸ்கேவியர், சிறந்த பெண்கள் துடுப்பாட்ட வீரர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரே பெண்கள் ஒருநாள் சர்வதேச வீரர் விருதுக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த ஆண்டு






தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 169 ஓட்டங்களையும் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஆண்கள் துடுப்பாட்ட வீரர் - Sir Garfield Sobers Trophy for the ICC Men's Cricketer of the Year 2022

2022ம் ஆண்டுக்கான சிறந்த ஆண்கள் துடுப்பாட்ட வீரராக பாகிஸ்தானின் பாபர் அசாம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரே ஒருநாள் சர்வதேச துடுப்பாட்ட வீரர் விருதையும் வென்றிருக்கிறார்.. 2022 இல் நடைபெற்ற சர்வதேச போட்டிகள் 44 (52 இன்னிங்ஸ்) இல் விளையாடி 2598 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஆனால் அதிகளவான ஓட்டங்களை பாகிஸ்தான் மைதானங்களில் எடுத்திருந்தார்.

கனவான் விருது - ICC Spirit of Cricket Award

நேபாளம் மற்றும் அயர்லாந்து அணிகள் 14 பிப்ரவரி 2022 அன்று ஓமனில் நடக்கும் Quadrangular தொடரின் ஆறாவது போட்டியில் மோதின. அந்த போட்டியில் நேபாளத்தின் கமல் சிங் ஐரி வீசிய 19வது ஓவரின் மூன்றாவது பந்தில், மார்க் அடேர் லெக்-சைட்டில் தூக்கி அடிக்க முனைந்தார், ஆனால் பந்து அவரது காலில் பட்டு லெக் சைடு நோக்கி சென்றது. பந்து வீச்சாளர், அந்த பந்தை எடுக்க முயலும் போது மறு முனையில் நின்று ஓடிய ஆண்டி மெக்பிரைனுடன் மோதினார், இதன் விளைவாக அயர்லாந்து வீரர் கால் தடுமாறி ஆடுகளத்தில் விழுந்தார். விரைவாக பந்தை எடுத்த ஐரி, அதை கீப்பர் ஆசி.ஃப் ஷேக் நோக்கி எறிந்தார், அந்த நேரத்தில் மெக்பிரைன் எழுந்து ஓடி வந்தும், ஆனால் அவரால் கிரீஸ்க்குள் வர முடியவில்லை. இருப்பினும், ஆசி.ஃப் பெயில்களை தட்டி ஆட்டமிழப்பு செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தார், இது கிரிக்கெட் உலகு முழுவதும் பரவலான அங்கீகாரத்தைப் பெற்றது.

இந்த செய்கைக்காக, ஆசிப் ஷேக் க்கு துடுப்பாட்ட கனவான் (Spirit of Cricket) விருது வழங்கப்பட்டுள்ளது.

